

பவள
விழா
மலர்
4வது யாழ்ப்பாணம்
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
சாரணர் குழு

Space Donated

by

**V. M. Shanmugam & Bros.**

General Merchants, Commision Agent & Transpost Agents

Colombo Office:-
74, Old Moor Street,
COLOMBO-12.
Telephone:- 31160

85, Hospital Road,
JAFFNA.

பாரினில் சேவைகள் பல செய்து
பவள விழாவை காணும்
யாழ் இந்து சாரணர் குழுவிற்கு
எமது வாழ்த்துகள்!



# அங்கர் மருந்தகம்

அரசடி வீதி, கந்தர்மடம்.

பவளவிழா காணும் யாழ் இந்து
சாரணர் குழுவை வாழ்த்துகிறோம்

**சிங்கம்ஸ் மருந்தகம்**

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

75 வது ஆண்டைக் கொண்டாடும்
சாரணர் சேவை நீடிக்க
வாழ்த்துகின்றோம்.

★ அழகின் நிழல் மாடம்

★ அனுபவம் மிக்க தொழில்நுட்பத்தின் எதிரோவியம்

★ உங்கள் இரசனைக்கு ஏற்ற மேஸ்த்தர்கள்

★ தரம்

★ அசல் தங்கம்

நவநாகரீக நங்கையர் தமிழீழத்தில்
நாடவேண்டிய மாளிகை

**கிருபா நகை மாளிகை**

294, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.

பவளவிழாக் காணும் யாழ் இந்து
சாரணர்களை வாழ்த்துகின்றோம்.

ஓவியங்களில் நிலைத்து
நிற்பது அஜந்தா.
இன்று புகைப்படக் கலை
யின் புகலிடம் அஜந்தா

சகலவிதமான வைபவங்களையும்
கண்கவர் கலரில் படமாக்கிக்
கொள்ள நாடுங்கள்.

**அஜந்தா போட்டோ**

63. சங்கிலியன் வீதி,
(தற்போதைய யா / மாநகரசபை
நூல்நிலைய முன்பாக)
நல்லூர்.

4 வது யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

சாரணர் குழு

# 75-ம் ஆண்டு நிறைவு மலர்

75th Anniversary of Scouting

## 1916 - 1992

**4-th JAFFNA**

**Jaffna Hindu College**

**SCOUT GROUP**

75-th year Commemoration Volume

# எங்கள் குழுச் சாரணர் கீதம்

சாரணியம் வாழ்க! யாழ் இந்து சாரணியம் வாழ்க
விழிப்போடு உதவி நற்பணிவுடன் கடமை
விளங்கும் எம் வாக்குறுதி — என்றும்
விளங்கும் எம் வாக்குறுதி (எங்கள் சாரணியம்)

தூய்மை நற்றெளிவுடன் தோற்றி வைத்து
என்றும் தோழமை சோதரம் சிங்கனமும்
இன்முகத்தால் வழிகாட்டி — எங்கள்
மன்னவன் பேடன் பவல் உழைத்தார் (சாரணியம்)

சாரணியம் போலே உலகினிலே வேறு
இயக்கங்கள் உளதோ இயல்பாலே
ச்சவையிலே தோற்றி சேவையிலே வளர்ந்து
நேசமோடு தேசம் வாழும் எம்மியக்கம்
(எங்கள் சாரணியம்)

குளிர் பனி மூடும் குறிஞ்சியிலும்
கொடு சிறுத்தைகள் வாழும் முல்லையிலும்
விருப்போடு நல்ல தொண்டாற்றி — எங்கள்
இருக்கையின் புகழினை ஏற்றிடுவோம் (சாரணியம்)

அகன்ற நோக்கே அகமகிழ்வாகும்
ஆயத்தமாயிரு எம் மறையாமே
புரிகின்ற சேவையில் திகழ்கின்ற ஒளியில்
புகழ் வந்து சேரும் எம் சாரணியம்
எங்கள் சாரணியம் இந்து சாரணியம் (சாரணியம்)

## Message from the Chief Commissioner

My congratulation and Good wishes to the 4-th Jaffna (Hindu-College) Scout Group on the occasion of their 75-th Anniversary of Scouting, Seventy five years of Scouting is a long time. During this period you must have produced many King's Scouts, Queen's Scouts and President's Scouts. They should now be leaders of the community and I am sure would be gracing your anniversary celebrations as worthy products of scouting.

Keep on keeping on the good Scouting you are doing and soon the centinary will dawn and you can give a worthy account for a hundred years!

*J. Lionel Silva*
Chief Commissioner

Sri Lanka Scout Association,
National Head Quarters,
65/9 Sir Chittampalam A Gardiner Mawatha,
COLOMBO - 2.

அரசாங்க அதிபரும், மாவட்ட ஆணையாளருமாகிய

## திரு. கா. மாணிக்கவாசகர் அவர்களின்

# "ஆசிச் செய்தி"

யாழ். இந்துக் கல்லூரியின் சாரணர் துருப்பின் பவள விழவை முன்னிட்டு வெளிவரும் இந்த மலரில் எனது ஆசியுரையினை வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்'

இளைய தலைமுறையினர் நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் வளர்வதற்கும், சமூகப் பொறுப்புணர்வு மிக்கவர்களாக விளங்குவதற்கும் பாடசாலைகளே முதற் காரணமாக விளங்குகின்றன.

தனியே கல்வியை மட்டும் போதிக்கும் சாலைகளாகப் பாடசாலைகள் இருப்பதில் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. அதனால் தான் பாடசாலைகள் வேறு வகையான பல நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன.

அதில், முதன்மை வகிப்பது சாரணர் இயக்கம் ஆகும். தன்னலம் கருதாது மற்றவர்களுக்குச் சேவை செய்வதையே அடிநாதமாகக் கொண்ட சாரணர் இயக்கப் பணிகளில் யாழ். இந்துக் கல்லூரி மாணவர்கள் ஏனைய துறைகளைப் போலவே பல சாதனைகள் நிகழ்த்தியுள்ளார்கள்.

அவற்றினை இங்கு பட்டியல் இடுவது அவசியம் இல்லை. ஆனால் மாணவர்களின் வளர்ச்சிக்கு இந்த சாதனைகள் மிக முக்கியமானவை.

இத்தகைய சாதனைகளைப் படைத்துக் கொண்டு இருக்கும் இம் மாணவர்களின் செயற்பாடுகள் மேன்மேலும் பெருக வேண்டும்,

பவள விழாக் காணும் யாழ். இந்து சாரணர் இயக்கம் அடுத்து வரும் ஆண்டுகளிலும் தனது மேன்மைகளைத் தொடர்ந்து நிலைநாட்ட வாழ்த்துகின்றேன்.

ஒப்பம் **கா. மாணிக்கவாசகர்**

அரச அதிபரும், மாவட்ட ஆணையாளரும்.

யாழ். மாவட்டம்.

மாநகர ஆணையாளரின்

# ஆசிச் செய்தி

யாழ்ப்பாண இந்துக்கல்லூரியின் சாரணர் குழுவினர் தமது 75 ஆவது ஆண்டினைப் பூர்த்தி செய்கின்ற பெருமைமிக்க நிகழ்வினைப் பாராட்டுவதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இளம் உள்ளங்களில் வாழ்க்கையின் உயர்ந்த இயல்புகளையும், நோக்கங்களையும், இலட்சியங்களையும் செயற்பாடுகளினாலும், கருத்தூட்டங்களினாலும் காத்திரமான பதிவுகளை ஏற்படச்செய்து நாட்டிற்கும் மக்களுக்கும் அரும்பணி ஆற்றக்கூடிய மனித வளங்களை உருவாக்குகின்ற உயர்ந்த பணியில் இவ் அமைப்பு வெற்றிகரமாக ஈடுபட்டிருப்பது வியந்து பாராட்டுதற்குரியதாகும்.

இச் சிறப்பியல்புகளைக் கொண்ட சாரணர் குழு மேன்மேலும் வளர்ந்தோங்க வேண்டுமென இறைவனை இறைஞ்சி வாழ்த்துகின்றேன்.

வே. பொ. பாலசிங்கம்.
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

கல்வியியற்துறைப் பேராசிரியரின்

# வாழ்த்துச் செய்தி

4 - வது யாழ்ப்பாணச் சாரணர் குழு (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிச் சாரணர் குழுவினர்) தனது 75 - வது ஆண்டு நிறை வினைக் கொண்டாடுவது பாராட்டுக்குரிய விடயமாகும். இவ் விழா மலருக்கு எனது வாழ்த்துச் செய்தியை அனுப்புவதில் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்,

சாரணியம் இளைஞர்களிடையே சேவை மனப்பான்மையும், அதற்கு வேண்டிய திறன் களையும் வளர்ப்பதில் ஈடுபாடுகொண்ட இயக் கமாகும், உலகின் பல பாகங்களிலும் சாரணர் கள் தமது செயற்பாடுகளின் மூலம் தமது சமூகங்களை உயர்த்தியுள்ளார்கள். 4 - வது யாழ்ப்பாணம் சாரணர் குழுவும் இச் சிறப்பில் அடங்குகின்றது.

ஆர்வம், இலட்சியம், சிறந்த தலை மைத்துவப் பண்பு என்பவற்றை எமது இளைஞ ரிடையே வளர்ப்பதன் மூலம் இக் குழு எமது மக்களுக்குப் பெருந்தொண்டாற்றியுள்ளது. இன்று எம்மைச் சூழவுள்ள நிலைமைகளில் இப்படிப்பட்ட தன்னலமற்ற தியாக அடிப் படையிலான சேவையினை எவரும் பாராட் டாமலிருக்க முடியாது.

பவள விழாக்காணும் இக் குழுவுக்கு எனது மனம் நிறைந்த பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

பேராசிரியர் வ. ஆறுமுகம்

கல்வியயற்துறை,
யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம்,
யாழ்ப்பாணம்.

வடமாநில கல்விப் பணிப்பாளரின்

# ஆசிச் செய்தி

இந்துவின் நித்திலத்தின் சிகரமென விளங்கும் வீணாகானபுரத்தில் விளக்கமுற வளம் கொழிப்பது இந்துக்கல்லூரி. இதன் பல்வேறு துறை வளர்ச்சிகண்டு கல்விப்புலம் களிக்கும் இவ்வேளையில் சாரணர் குழுவினர் தமது 75 வது ஆண்டு விழாப் பூர்த்தியினைக் கொண்டாடுகின்றனர் அதன் விளைவாக மலர் ஒன்று மலர்வதாக அறிகிறேன். மண்ணினை நேசித்து சமத்துவத்தைப் பேணி, சத்தியத்தை நிலை நாட்டும் சாரணர் இந்துக் கல்லூரியில் எழில் பெறத் தொண்டாற்றுவது கண்கூடு. வகுப்பறைக் கற்பித்தலோடு புற செயற்பாடுகளிலும் முன்னணி வகுக்கும் உங்கள் கல்லூரியின் திறன் கண்டு வாயுற வாழ்த்துகிறேன். இன்றைய சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் சீரிய பணியில் சிறந்த மிக்கோங்குவது சாரணியமே. உடுக்கை இழந்தவன் கைபோல ஒருவன் இடுக்கண் களைவதே பேராண்மை, அந்த வகையில் ஊராண்மையும் பேராண்மையும் மிக்க தங்கள் சாரணர் குழு உயிர்பொடு விளங்கிச் செயலாற்றுவது கண்டு சிந்தை மகிழாதிருக்க முடியாது, ஊழிற் பெருவலி யாவுள என்றெண்ணியிருந்தவர்க்கு ஊழையும் உட்பக்கம் காண்பர் உலைவின்றித் தாழாது ஏற்றுபவர் என்ற வள்ளுவன் குறள் ஒலித்துக் சிலி கொள்ளவைக்குமன்றோ. அந்த ஆரோக்கியமான எழுச்சியிலே இணைந்து செயலாற்றும் நளைய தேசமன்னராகும் உங்களைப் பாராட்டுவதில் பெருமையும் மகிழ்வும் அடைகிறேன். உங்கள் பணிசிறக்க என் உளமார்ந்த வாழ்த்துக்கள்.

**இரா. சுந்தரலிங்கம்**
கல்விப் பணிப்பாளர்,
வடமாநிலம்.

மாவட்ட சாரண ஆணையாளரின்

# செய்தி



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி தமிழர் தலை நிமிர் கழகம். நூற்றாண்டு காலத்திற்கு மேல் அளப்பரிய சேவையினை எமது மக்களுக்குச் செய்து வருகின்றது. இந்துக் கல்லூரியின் சாரணர் குழு யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட முதல் ஐந்து சாரணர் குழுக்களில் ஒன்றாகும். 1916 ஆம் ஆண்டு திரு. V. கதிர்காமன் அவர்களை சாரண ஆசிரியராகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. சாரணர் பதிவேடுகளின்படி இருபத்தியொரு சாரணர்களுடன் சாரணர்குழு ஆரம்பிக்கப்பட்டது அன்று முதல் அயராத முயற்சியும் சேவையும் செய்த காரணத்தினால் இன்று இலங்கை முழுவதுமே போற்றும் முன்னணிக் குழுவாக வளர்ந்து விட்டது.

சாதனைகள் வரலாற்றில் 1963 ஆம் ஆண்டு இந்துக்கல்லூரிக்கு முக்கியமான ஆண்டாகும். ரோட்டரி கேடயத்தினை முதல் முதல் பெற்றது குருளைச் சாரணர் குக்ரோட்டம் தட்டத்தினைப் பெற்றார்கள். லோறன்ஸ் பெர்னான்டோ திறமைக் கொடியினைப் பெற்றது இக்குழு. இவை மகத்தான சாதனைகளாகும். எனது நினைவுப்படி 1963 ஆம் ஆண்டில் சாரண ஆசிரியர் திரு. S. முத்துக்குமாரன், குருளைச் சாரண ஆசிரியர் திரு. இ. சிவநேசராசா இவர்களைப்போல் திரு. S. சிவசுப்பிரமணியம் (சாரண ஆசிரியர்) எனது நினைவில் வருகின்றார்

இக் கல்லூரி சாரணர் குழுவினால் நானும் வளர்க்கப்பட்டவன் என்பது குறித்து பெருமிதம் அடைகின்றேன். வரலாற்று நூல்கள் எழுதி வரலாறாக மாறிய 'சிங்கி மாஸ்டர்' எமது சாரண ஆசிரியர் திரு. S நடராசா சாரண தலைவராகக் கடமையாற்றினார். இக் கல்லூரியின் வளர்ச்சக்கு எமது சாரணர் குழு பல்வேறு வகைகளில் தொண்டாற்றி வந்துள்ளது. இக் கல்லூரியின் கட்டிட நிதிக்காக நடாத்தப்பட்ட களியாட்ட விழாவில் எமது குழு செய்த சேவை மறகக முடியாததாகும். அக்களியாட்ட விழாவில் தினமும் மாலை நேரங்களில் பிரதம விருந்தினரை வரவேற்க கோலாட்டம் செய்தது சாரணர் குழு. சிறந்த நாடகமொன்றினை அரங்கேற்றிப் பெரும் புகழும பெற்றது கல்லூரி சாரணர்குழு.

இக் கல்லூரியின் சாரணர்கள் இன்று உலகமெங்கும் பரந்து வாழ்கிறார்கள். அமெரிக்காவில் நடைபெற்ற சாரண ஜம்பொறிக்கு யாழ் இந்து சாரணர்கள் சென்றமை எனது நினைவிற்கு வருகின்றது. பல்வேறு துறைகளில் சாரணர்கள் தலைமை தாங்கி நிற்பது பெருமை தருகின்றது.

மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் நாம் வாழ்கின்றோம் அல்லற்பட்டு அவதியுறும் எமது சமுதாயத்திற்கு சாரணர்கள் செய்துவரும் தொண்டு மகத்தானது. ராதா, சர்மா, போன்ற மாவீரர்கள் சாரணர் தலைவர்களாகயிருந்தது பெருமைக்குரியதாகும். தியாகம், பொதுநலம் என்பவை எமது சாரண இயக்கத்தின் மூலம் மாணவர் மத்தியில் மேலும் வலுவடைந்து வருகின்றது. எவ் விடயத்திலும், எவர்க்கும், எந்நேரத்திலும் பணியாற்றுவதில் எமது சாரணர்கள் முன்நிற்கின்றார்கள். இக் கல்லூரிச் சாரணர்களின் திறமை, உற்சாகம், சேவை எல்லோரையும் கவர்ந்து வருகின்றது. அவர்கள் மேலும் மேலும் வளர-வலிமையடைய வாழ்த்துகின்றேன்.

**இ. மகேந்திரன்**

யாழ் மாவட்ட சாரண ஆணையாளர்

அதிபர் கொக்குவில் இந்துக்கல்லூரி

# பிரதி சாரண மாவட்ட ஆணையாளரின் செய்தி




''எவ்வகை வாழ்வும் எழிலுற இயங்க இயக்கங்கள் இன்றியமையாதன. இவ்வித இயக்கங்களுள் நற்பிரசைகளை உருவாக்கும் சர்வ தேச சிறுவரியக்கமே சாரணரியக்கமாகும்.

இவ்வித சிறப்பு மிகு இயக்கம் ஈழத்தில் முதன்முதல் ஆரம்பிக்கப்பட்ட ஐந்து கல்லூரிகளில் முன்னணி வகித்த சாரணர் குழுக்களில் ஒன்றே யாழ். இந்துக்கல்லூரி சாரணர் குழுவாகும்.

இக்குழு ஆரம்பித்த காலம்முதலே தனக்கு ஒப்பாரும், மிக்காரும் இல்லை என்பது போல் சாரணியத் தனித்துவத்தை பேணிவந்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ் இந்துக் கல்லூரிச் சாரணர் குழு மென்மேலும் வளர்ந்து சாரணரியக்க வளர்ச்சிக்கு உறுதுணை புரிய வல்லான் வழிவகுப்பாராக! 75 வது நிறைவினைக்காணும் இச் சாரணர்குழு மென்மேலும் வளர வாயார மனதார வாழ்த்துகின்றேன்.

**டோறஸ் வி. மு இராசலிங்கம்**
பிரதி மாவட்ட ஆணையாளர்

# அதிபரின் ஆசிச் செய்தி

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் வரலாறு எவ்வாறு நீண்டமைந்திருக்கிறதோ, அது போன்று யாழ் இந்து சாரணியத்தின் வரலாறும் மிக நீண்டதாகும். எமது கல்லூரி சாரணியத்தில் பங்கு கொண்டு சேவை செய்த ஆசிரியர்களும், மாணவர்களும் உலகின் பல பாகங்களிலும் சமூகம் போற்றும் உத்தமர்களாக வாழ்ந்து சிறந்துள்ளனர்.

''சேவையே மேலான இன்பமும், தெய்வமுமாம்'' என்பதற்கிணங்க சாரணியத்தில் தன்னை இணைத்துக் கொண்டு வளர்பவர் சமூகம் எதிர்பார்க்கின்ற நற்பிரஜையாக விளங்குவான் என்பது வெளிப்படையான அம்சமாகும்.

75 ஆண்டுகளை ஒரு கழகம் பூர்த்தி செய்வது என்பது மிக அரியதொரு விடயமாகும். அதுவும் சிறப்பான முறையில் இயங்கி, சாரணிய மாணவர்களில் பலர் 'ஜனாதிபதி விருது' பெற்று கல்லூரி பெருமையடையும் வகையிலும் எமது கல்லூரி சாரணிய கழகம் இயங்கியமை பாராட்டுக்கு உரியததும் நினைந்து இறும்பூதெய்தவும் செய்வதாகும்.

இத்தகைய சாரணியம் எமது கல்லூரியில் 75 ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இவ்வேளையில் இதன் ஸ்தாபகர் சேர் பேடன் பவலின் இலட்சியம் இங்கு பூர்த்தியாகியிருப்பதனை நினைத்து பார்க்கவும் எமது சாரணியமும் அதில் உழைக்கும் மாணவர்களும், ஆசிரியர்களும் செய்திருக்கும் அரும் பணிக்காக அவர்களை வாழ்த்தி ஆசி கூறுகிறேன்.

**அ. பஞ்சலிங்கம்**


**அதிபர்**

## *OUR PRINCIPAL*



**Mr. A. Panchalingam**
**(B. Sc., DipinEd,, IDEPA (New Delhi)**

## *DEPUTY PRINCIPAL*



**Capt. N. Somasundaram**
**(Superviser and Codlnatior activities)**

## *OUR GROUP SCOUT LEADER*



**Mr. P. Sriskantharaja**
**Phase iv,**

# சாரணர் குழுத் தலைவரின் பிரார்த்தனை!

ஒரு நூற்றாண்டு காலமாக நாட்டின் (இலங்கை) தேவைகளைப் பல்வேறு மட்டங்களில் பூர்த்தி செய்கின்றவர்களை, உற்பத்தி [உருவாக்கிய] செய்த தமிழ் மொழி பேசும் மக்களின் தலைநிமிர் கழகமாகத் திகழ்கின்ற யாழ் இந்து, சாரணர் குழுவினர் 75 வது ஆண்டு நிறைவு விழாவின்போது சாரணர் குழுத் தலைவராக இருப்பதில் நான் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

உளவியல் தெரிந்தவர்களில் கரை தேர்ந்தவர்கள் தான் பண்பு நிறைந்தவர்களைப் பொறுப்புணர்வுடன் நுட்பமாக பணி புரிகின்றவர்களை, சமூக தேவையை நிறைவு செய்கின்ற கொள்கையாளர்களை, தனித்துவமானவர்களை உருவாக்கமுடியும். சடப் பொருட்களை உற்பத்தியாக்குவதற்கும் முழுமையான முதன்மையான சேவையாளர்களை மனித மாணிக்கங்களை உருவாக்குவதற்கும் வேறுபட்ட ஆளுமை வேண்டும்.

தனித்துவமான தலைமைத்துவங்கள் தன்னலமற்று கற்பித்தலில் ஏணிப் படிகளாகவிருந்த ஆசிரியப் பெருந்தகைகள் புறப்பாட விதானத்தில் விஷேட நிபுணர்களாக சமூகத்திற்காக தம்மை அற்பணித்து முத்திரை பதித்த சாதனைச் சேவைகள் நூற்றாண்டு உற்பத்தியின் வெளிப்பாடாக கல்லூரியை தேசிய மட்டத்திற்கு உயர்த்தியுள்ளது மட்டுமன்றி உலகெங்கிலும் தமிழினத்தினதும் சைவத்தினதும் பெருமையைப் பறைசாற்றி நிற்கின்றன.

இந்த வகையில் 75 வது ஆண்டுகளைப் பூர்த்தி செய்கின்ற சாரணர் குழுவினது பங்கு சாரணிய விதிக்கு அமைய செயற்பட்டமையால் தமக்குப் புகழையும் சமுதாயத்திற்குச் சேவையைச் செய்துள்ளமை இந்துவின் போக்கிற்கு இதமூட்டுபவையாக அமைந்துள்ளது. இத்தனை காலமும் யாழ் இந்துவின் பெருமைக்கும் உயர்வுக்கும் ஒரு காலாக அமைந்திருந்த சாரணர் இயக்கம் தொடர்ந்தும் இந் நிலையினைப் பேணவேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்,

**பொ. ஸ்ரீஸ்கந்தராசா**

சித்தங்குறிச்சி,

பூநகரி

# மலரை நுகருமுன்.........
# சற்று நில்லுங்கள்!




யாழ் இந்து பெற்ற மூத்த மகவுக்கு பவள விழாவென்று ஓர் மலரை வெளியிடுவதற்காக நாம் அயராது உழைத்ததன் பயனாகவே இம் மலர் உங்கள்கைகளில் தவழ்கின்றது. தற்போதைய சூழ்நிலையில் எம்மால் இப்படியான ஓர் மலரை வெளியிடுவதை இட்டு நாம் பெருமை கொள்கின்றோம். இப் பெருமைக்கு உதவிய அனைத்து கரங்களையும் நினைவு கூறுகின்றோம்.

எமது பவளவிழா மலர் ஆனது இவ்வளவு தாமதமாக வெளிவந்ததையிட்டு மனம் வருந்துகின்றோம். இம் மலரில் எமது சாரண வரலாறுகள் பெரும்பாலும் சேர்க்கப்பட்டுள்ளன. இம் மலரானது எமது முன்னேற்றப் பாதையில் வீறுநடை போடுவதற்கு நிச்சயமாக உதவும் என பூரணமாக நம்புகின்றோம்.

**இதழாசிரியர்கள்**

செல்வன் சி. சிறிகரன்
தி. லக்ஸ்மணன்
கு. பார்த்தீபன்


## *OUR SCOUT LEADER'S*



Wr. K. Vikneswaran
(Scout)



Mr. P. Vilvarajah (Rover)
(Phase II)




Mr. P. Muththukumaran
(Cubs)

## *OUR ADVISOR*




**Mr. N. Nalliah (L. T. / D. T. C.)**

## *OUR INSTRUCTOR'S*



**Mas. K. Sathiyan**

(President Scout)



**Mas. S. Chevvel**

(President Scout)

# கல்லூரிக் கீதம்

வாழிய யாழ்நகர் இந்துக் கல்லூரி
வையகம் புகழ்ந்திட என்றும் [வாழி]

இலங்கையின் மணித்திரு நாட்டினில் எங்கும்
இந்து மதத்தவர் உள்ளம்
இலங்கிடும் ஒருபெருங் கலையகம் இதுவே
இளைஞர்கள் உளம் மகிழ்ந்தென்றும்

கலைபயில் கழகமும் இதுவே—பல
கலை மலி கழகமும் இதுவே—தமிழர்
தலை நிமிர் கழகமும் இதுவே!

எவ்விட மேகினும் எத்துயர் நேரினும்
எம் மன்னை நின்னலம் மறவோம்
என்றுமே என்றுமே என்றும்
இன்புற வாழிய நன்றே!
இறைவன தருள் கொடு நன்றே!

ஆங்கிலம் அருந்தமிழ் ஆரியம் சிங்களம்
அவை பயில் கழகமும் இதுவே!
ஒளிர் மிகு கழகமும் இதுவே!
ஓங்கு நல் அறிஞர்கள் உவப்பொடு காத்திடும்
ஒரு பெரும் கழகமும் இதுவே!
உயர் வுறு கழகமும் இதுவே!
உயிரென கழகமும் இதுவே!

தமிழரெம் வாழ்வினிற் தாயென மிளிரும்
தனிப் பெருங் கலையகம் வாழ்க!
வாழ்க! வாழ்க! வாழ்க!

தன்னிகர் இன்றியே நீடு
தரணியில் வாழிய நீடு

# உலக சாரணியம்

உலகில் இளைஞர்களுக்காகப் பல இயக்கங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒப்புயர்வற்றது சாரணர் இயக்கம். இது உண்மையேயன்றி மிகைப்பட்ட கூற்று அன்று. இளைஞர்களிடம் பொதிந்து மறைந்துள்ள பல அருந்திறன்களை வெளிப்படுத்தவும் சிறப்புற வளர்க்கவும் இவ்வியக்கம் வாய்ப்பளிக்கிறது. மாணவர்கள் உடல் வளர்ச்சி, கட்டுப்பாடு ஆகியவை மட்டுமின்றி உளவளர்ச்சி தொண்டு மனப்பான்மை, செயற்திறன் ஆகியவற்றிலும் போதிய கவனம் செலுத்துகிறது. தற்போது 118 நாடுகளில் இவ்வியக்கம் பல்கிப் பெருகி ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றியுள்ளது.

தலைசிறந்த இவ்வியக்கத்தை உலகுக்கு அளித்தவர் ராபர்ட் ஸ்டீபன்ஸன் ஸ்மித் பேடன் பவல் என்னும் பெரியார் ஆவார். இவர் இங்கிலாந்து நாட்டில் 1857 ம் ஆண்டு மாசி மாதம் 22 ம் திகதி பிறந்தார். இவரது தந்தையர் H.G. பேடன்பவல், இவர் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றினார். இவரது தாயார் ஹன்ரீட்டாகிரேன். இவர்களுக்கிருந்த ஏழு குழந்தைகளில் இவர் ஐந்தாவது மகனாகப் பிறந்தார்.

சிறுவர்களது ஆக்க சக்தியை நன்கறிந்த பேடன் பவல் "சாரணியம் சம்பந்தமாக அவ்வப்போது பல கட்டுரைகளை வெளியிட்டு வந்தார். இக் கட்டுரைகளை ஆர்வத்தோடு வரவேற்ற இளைஞர்களைக் கண்ட இவர் 1907 ம் ஆண்டு பிரௌன்சித்தீவு என்னுமிடத்தில் சமுதாயத்தின் வேறு பிரிவுகளிலிருந்தும் 20 மாணவர்களைத் தேர்ந்தெடுத்து ஒரு சோதனை முகாம் நடத்தினார். இதுவே சாரண இயக்கத் துவக்கம் எனக் கருதப்படுகிறது.

இம் முகாமின் வெற்றியால் ஊக்குவிக்கப்பட்ட பேடன் பவலார் சிறுவர் சாரணியம் என்ற நூலை வெளியிட்டார். சாரணப்பயிற்சி வெகு விரைவில் பரவத் தொடங்கியது. 1910 ம் ஆண்டு தம் 58 ஆம் வயதில் ஏழாம் எட்வேட் மன்னரின் வேண்டுகோளின்படி இவர் இராணுவத்திலிருந்து விலகி எஞ்சிய தம் வாழ் நாள் முழுவதும் இவ் வியக்க வளர்ச்சிக்காகவே செலவிட்டார்.

1920 ம் ஆண்டு உலக சாரணர் சபை உதயமானது. உலக சாரணர்குழு நியமிக்கப்பட்டது. ஸ்தாபகர் பேடன் பவல் இறந்தபின் இச் சபை பெரும் பொறுப்பை ஏற்று நடத்தவேண்டியதாயிற்று. உலக சாரணச் சபையுடன் ஒரு தேசிய சாரணர் சங்கம் இணைவதற்கு பின்வரும் அடிப்படைத் தத்துவங்களை ஏற்று நடக்க வேண்டும்.

கடவுள் / சமயத்திற்கான கடமை,
நாட்டுப்பற்று,
உலக சகோதரத்துவம்,
பிறருக்குதவி,
விதியும் வாக்குறுதியும்,
இஸ்ட பூர்வமான அங்கத்துவம்,
அரசியல் பற்றின்மை,
வெளிப்புற வாழ்க்கை.

1955 ம் ஆண்டு உலக சாரண சபை கூடியபோது உலகச் சாரண நிர்வாகம் 5 பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டது.

(1) ஆசியப் பசுபிக் பிரதேசம் —இது இந்தியா, ஜப்பான், பசுபிக் தீவுகள், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளை உள்ளடக்கியது. இதில் இலங்கையும் அடங்கும்.
(2) அராபியப் பிரதேசம்.
(3) ஆபிரிக்கப் பிரதேசம்.
(4) ஐரோப்பிய பிரதேசம்
(5) அமெரிக்க இடைப்பிரதேசம்,

இலங்கையின் வெளிக்கள ஆணையாளர் ஜெரல். வீ, பெனான்டோ ஆசிய பசுபிக் பிரதேச அலுவலர்களில் ஒருவராகக் கடமை புரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகசபை இரு வருடங்கட்கொருமுறை கூடும். 12 பேர் அடங்கிய குழுவை நியமிக்கும். ஒவ்வொரு இரு வருடங்கட்கு இருவர் வீதம் இக்குழுவில் அங்கத்துவம் இழக்கப் புதிய இருவர் இடம்பெறுவார்கள். இரண்டு வருடங்கட்கு உலக சாரணீயத்தை நிர்வகிக்கும் பொறுப்பு இதற்கு உண்டு. இது ஜெனிவாவில் உள்ள உலக சாரணீயப் பணிமனை மூலம் தனது பணிகளைப் புரியும்.

தற்போது 118 நாடுகளைக் கொண்ட இச்சபை தகவல்கள், பயிற்சி, ஜம்பொறி, பணிப்பு, உதவி வருகை, வெளியீடு, ஆலோசனை, ஆராய்வு ஆகியவற்றை நடைமுறைப்படுத்துகிறது.

க. இ. தவகோபால்
உதவி மாவட்ட ஆணையாளர்
[ பயிற்சி ]

(1934 ம் ஆண்டில் எமது துருப்புத் தலைவராக இருந்து பல சாதனைகளை நிலைநாட்டியவரும் 1992 ம் ஆண்டு எமது பேடன் பவல் தின விழாவின் பிரதம விருந்தினரும் எமது துருப்பின் வளர்ச்சியில் அக்கறையுடையவரும் ஆன திரு. த. கனகராஜா அவர்கள் சாரண பழமையை நினைவு படுத்துகின்றார்.)



## 75-ம் ஆண்டு நிறைவு விழாக் காணும் யாழ் இந்துக் கல்லூரி சாரணர் இயக்கம்

மனிதன் எப்பொழுது தனது பகுத்தறிவைப் பாவிக்கிறானோ அப்பொழுது தான் மனிதனாக வாழமுடியும் இல்லாவிடின் மனிதன் மிருகங்களாக வாழ்ந்து மடிய நேரிடும். பேடன் பவல் அவர்கள் சாரணிய விதிகளில் முதலாவதாக கடவுளுக்குத் தொண்டு செய்யவேண்டும் என்று கூறி இருக்கிறார்கள். கடவுள் மக்களைத் தன் சாயலாகவே படைத்து இருக்கிறார். கடவுளுக்கு தொண்டு செய்வது என்றால் தங்களைப்போல மற்றவர்களை நேசித்து இவர்களுக்கு தொண்டு செய்வதேயாகும். ''மக்கள் சேவையே மகேஸ்வர பூசையாகும்'' சேவையிலே தான் நாம் கடவுளைக் காணமுடியும் என்று முன்பு வாழ்ந்து கண்ட பெரியோர்களும் தத்துவ ஞானிகளும் கூறி இருக்கிறார்கள் என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது,

சாரணர் தன்னம்பிக்கை யுடையவர்களாகவும், சுயநலம் இல்லாதவர்களாகவும், எந்நேரமும் சிரித்த முகத்துடன், திரிகரண சுத்தியுடன் தொண்டு செய்வதற்கு ஆயத்தமாக இருக்கவேண்டும். இப்படிப்பட்ட சிறந்த பண்புகளை இவர்கள் தாமாகவே கற்றுக்கொள்ளுகிறார்கள் என்று சொன்னால் மிகையாகாது இப்படிப்பட்ட சிறந்த பழக்க வழக்கங்களினால், ஏனையோர் இவர்களைப்

பார்த்து சாரணீய வாழ்க்கையில் நல்ல விஷயங்கள் அடங்கி இருப்பதாக எண்ணு வார்கள். இவர்கள் தாங்கள் பெறும் இன்பங்களை மற்றவர்களோடு சேர்த்து அனுபவிக்கும் மேலான பண்புள்ளவராக இருப்பார்கள்.

ஒருவன் சாரணனாக சேர விரும்பினால், குழுத் தலைவருடன் சாரணீய வாழ்க்கையின் உண்மையான நோக்கத்தையும், தத்துவங்களையும் அறிந்து கொண்ட பின்புதான் இவைகளுக்கு பணிந்து நடப்பதாக திடசங்கற்பம் செய்து கொண்டு இவ்வியக்கத்தில் ஓர் அங்கத்தவனாக சேர்ந்து கொள்ள வேண்டும். சாரணீய வாழ்க்கையின் தத்துவங்களை மனதில் ஒரு பாடமாக வரைந்து கொள்ள வேண்டும். இத்தத்துவங்களை சரியான முறையில் அறிந்துகொள்ளாவிடின் சார ணனாகச் சேர்வதில் ஒரு பிரயோசனமும் இல்லாது போய் விடும்.

இவ் வியக்கத்தின் ஸ்தாபகர் பேடன் பவல் அவர்கள் சாரணீயம் என்பது ''திறந்த வெளிச் சகோதரத்துவமும் சேவையுமாகும்'' என்று கூறி இருக்கிறார்கள். ஆகவே ஒருவனை பூரண மனிதனாக்கி தனக்கும், தனது தேசத்திற்கும், சமூகத் திற்கும் சிறந்தவனாக விளங்க சாரணீய வாழ்க்கை வழிகாட்டியாக இருக்கிறது என்பது எனது அறுபது ஆண்டு சாரணீய வாழ்க்கையின் அனுபவமாகும்.

யாழ் இந்துக் கல்லூரியின் சாரணக் குழுவின் 75 வது ஆண்டு நிறைவு விழா இவ் வருடத்தில் நடைபெற இருக்கிறது. இக் கல்லூரியின் பழைய மாணவன் என்ற வகையிலும், இக் கல்லூரியின் சாரணியக் குழுவில் ஓர் தலைவனாகவும் இருந்தேன் என்பதை கூற பெருமைப்படுகிறேன். இக் கல்லூரியின் வெள்ளி விழா, வைரவிழாக்களில் பங்குபற்றியுள்ளேன் என்றும், இனி வரும் 75 வது ஆண்டு நிறைவு விழாவில் நான் பங்குபற்றுவேன் என்று சொல்வதில் மிகவும் பெருமைப்படுகின்றேன். இச் சாரணிய வாழ்க்கையின் பயனாக நான் ஒரு மனித னாக வாழ்ந்து இப் பிறவியின் நோக்கமாகிய பிறவாமை ஆகிய பேரின்பத்தை அடைய வழி வகுத்து இருக்கிறது என்று கூறினால் மிகையாகாது.

''வாழ்க எமது கல்விக் கோயில் யா. இந்துக் கல்லூரி
வாழ்க சாரணியத் தந்தை பேடன் பவல் அவர்கள்''

**ம.வீ த. கனகராஜா**
யாழ். இ. கல்லூரி சாரணியக் குழுவின்
முன்னை நாள் குழுத் தலைவரும்
உதவி மாவட்ட சாரணர் ஆணையாளர்
யாழ். மா. கிளைச் சாரணியச் சங்கம்

# யாழ் மாவட்டத்துக்கு வழிகாட்டிகளின் வருகை

சாரணர் இயக்கம் என்ன நோக்கத்திற்காக தொடக்கப்பட்டதோ அதே நோக்கிற்காக யுவதிகளிற்குச் சந்தர்ப்பம் வழங்கும் நோக்கோடு வழிகாட்டிகள் இயக்கமான சாரணர் இயக்கத்தின் சகோதரத்துவ இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. சாரணர் தந்தை றோபேட் ஸ்ரீவின்ஸ் சிமித் பேடன் பவல் அவர்களது பாரியார் லேடி பேடன் பவல் அவர்களால் வழிகாட்டிகள் ஆரம்பிக்கப்பட்டது,

இச் சாரணியர் இயக்கமானது யாழ்ப்பாணத்தில் ஆயிரத்துத் தொளாயிரத்து இருபதாம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இந்தியாவில் இருந்து வந்த செல்வி றொபோதம் [ROBOTHAM] என்பவரால் சாரணியர் இயக்கம், அதன் பிரயோசனங்கள், அதனால் வரக்கூடிய நன்மைகள் அதிற் காணப்படும் கவர்ச்சி போன்ற விடயங்களை யாழ் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியிலே விளக்கமளித்தார். உடனடியாகவே இருபது இளம் பெண்கள் ஓர் குழுவாகக் கூடி சேரத் தீர்மானித்தனர். இவர்களைக் கொண்டு முதலாவது யாழ்ப்பாணமாக சுண்டுக்குளி மகளிர் கல்லூரி பதிவுசெய்து இயங்கத் தொடங்கியது.

இந் நற் செய்தியைத் தொடர்ந்து உடுவில் மகளிர் கல்லூரி புதுவித காக்கி சீருடையுடன் புதுப் பொலிவுடன் இரண்டாவது யாழ்ப்பாணமாகப் பதிவு செய்து இயங்கத் தொடங்கினர். வேம்படி மகளிர் கல்லூரியும் தாமாக முன்வந்து இருபது பெண்களைத் தேர்ந்தெடுத்து சாரணர் தந்தையும், சாரணியர் தாயும் பிறந்த இரண்டாம் மாதம் இருபத்தியிரண்டாம் திகதி மூன்றாவது யாழ்ப்பாணமாகப் பதிவு செய்தது.

இதற்கிடையில் இரண்டாவது யாழ்ப்பாணச் சாரணியர் குழுவைச் சேர்ந்த அரியம்மா ஹட்சன் கிணற்றுக்குள் விழுந்த பெண்ணொருத்தியைக் காப்பாற்றிச் செய்தித் தாள்களில் தலையங்கங்களில் இடம்பிடித்து சாரணியர் இயக்கத்தின் புகழ் மேலும் பரவச் செய்தார்.

ஆயிரத்து தொளாயிரத்து இருபத்தி மூன்றாம் ஆண்டு நாலாவது யாழ்ப்பாணமாக இராமநாதன் கல்லூரி பதிவு செய்தது. இதனைத் தொடர்ந்து ஆயிரத்து தொழாயிரத்து இருபத்தியெட்டாம் ஆண்டு முடியுமுன் எல்லாமாக எட்டுச் சாரணியர் சங்கம் உருப்பெற்றிருந்தன.

வழிகாட்டிகள் இயக்கமானது தனக்கென ஓர் அபிமானம் பெற்றவுடன் அதில் இருக்கும் அங்கத்துவர் தொகையும் அதிகரித்தது. பதினொரு வயதுக் குட்பட்டவர்களுக்காக ஓர் அமைப்புத் தேவைப்பட்டது. இதனால் பாடசாலைகளில் "பிறவுனியர்" கூட்டங்களும் "றேஞ்சர்" கூட்டங்களும் ஏற்படுத்தப்பட்

டன. இதன் விளைவாக பிறவுனியர் சாரணியர் அங்கத்தில் சேரவும் சாரணியர் பதினெட்டு வயதை எட்டியதும் ''ரேஞ்சர்'' குழுவிற் சேரவும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

'பிறவுனியர்', 'சாரணியர்', 'ரேஞ்சர்' ஆகிய எல்லோரும் சேர்ந்து ஒன்று கூடி முதன் முறையாக ஆயிரத்து தொளாயிரத்து முப்பத்தி நான்காம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஐந்தாம் திகதி மாபெரும் அணிவகுப்பை நடத்தினர்.

ஆயிரத்து தொளாயிரத்து நாற்ப்பத்தியேழாம் ஆண்டு ஆகஸ்ட் முதலாம் திகதி வழிகாட்டிகள் இயக்கத்துக்குப் பல வித்துகள் வளர்வதற்குக் காரணமான நாள் அதாவது பத்துசாரணியர் வேம்படி மகளிர் கல்லூரியில் நடந்த முதல் மாடி வீட்டுப்பாசறையில் கலந்துகொள்ளும் பெருமை பெற்றனர் என்ற செய்தி தூரத்தே நெடுந்தீவு, வேலணை போன்ற இடங்களில் பரவி அங்கு உள்ள பெண்களின் ஆர்வத்தைத் தூண்டியதால் ஆயிரத்து தொளாயிரத்து ஐம்பதில் எல்லாமாக இருபத்தைந்து சங்கங்கள் ஆகப் பெருகியது. அகில இலங்கைச் சாரணியர்களின் மகாநாடு முதல் முறையாக யாழ்ப்பாணத்தில், பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலே ஆயிரத்து தொளாயிரத்து அறுபத்திரண்டாம் ஆண்டு நடைபெற்றது. இதில் தென்னிலங்கையில் இருந்து பலதலைவர்கள் பங்கு பற்றினார்கள்,

இவர்களும் சாரணர் இயக்கம் போன்றே சின்னங்கள் செய்தல், சகோதரத்துவம் என்பவற்றைக் கொள்கைகளாகக் கொண்ட சாரணர் சகோதரத்துவ இயக்கம், இவ் இயக்கத்தின் மூலம் மாணவிகள் தமதுப் தலைமைத்துவ பண்பையும், ஆளுமையையும், தன்னம்பிக்கையையும் வளர்த்துச் சமுதாயத்தில் தனது சொந்தக் காலில் நிற்பதற்குப் பெரிதும் பக்கபலமாக நிற்கின்றது, யாழ்ப்பாணத்தைப் பொறுத்தளவில் இதுவரை அண்ணளவாக எழுபது சாரணியர் சங்கங்கள் இருப்பது பெருமைக்குரியதாயினும் இவ் வியக்கத்தின் நூடு மாணவிகள் உச்சப் பயனைப் பெறுவதும் வழங்குவதும் தற்போது குறைவாக உள்ளது வேதனைக்குரியதாகும். மாணவிகள் இச் சாரணியர் இயக்கத்தின் மகிமையை உணர்ந்து திறம்படச் செயற்படவேண்டும்.

'' வாக்குறுதியை உலகெங்கும் பரப்பித் தொண்டு ஆற்று ''

மு. ஜோதீஸ்வரன்
(துருப்பு தலைவர்)

# போராட்ட காலத்தில் சாரணனின் பங்கு

இன்றைய காலகட்டத்தில் ஒவ்வொரு தனி மனிதனும் சுயநலத்தை தவிர்த்து பொதுநோக்கோடு போராட்டத்திற்கு பங்களிப்பது மிக அவசியமான தொன்றாகுகிறது. இப்படியான வேளையில் பரந்த மனமும் சேவை மனப்பான்மையும் உள்ள சாரணர்களது பங்கோ மிக மிக அத்தியாவசியமானது ஒன்றாக வுள்ளது. எமது போராட்டம் ஓர் மக்கள் போராட்டம் ஆகும். இது பெருமளவில் மக்களது உதவிகளை வேண்டி நிற்கிறது. இராணுவ நடவடிக்கையால் இடம் பெயரும் அகதிகள் எதிர்காலமே கேள்விக்குறியாக இருக்கின்ற நிலையில் பிறருடைய உதவிகளை வேண்டி நிற்கின்றனர். இத்தகைய சந்தர்ப்பங்களில் சாரணர் தம் கடமையை உணர்ந்து அவர்களுடைய தேவைகளை நிறைவேற்ற வேண்டும். அகதிகளுக்காக உணவு, உடை சேகரித்தல் அவர்களுக்கான தற்காலிக உறைவிடங்களை அமைத்துக் கொடுத்தல் என்பன ஒரு சாரணன் செய்யக் கூடிய சேவைகளாகும்.

பொதுமக்களின் நன்மை கருதி பொது இடங்களில் பதுங்கு குழிகள் அமைத்தல், குண்டு வீச்சு நடத்தப்படும் இடங்களில் காயமடையும் மக்களுக்கு உடன் முதலுதவி வழங்கல் என்பன ஒரு சாரணன் ஆற்றக்கூடிய போர்க்காலப் பணிகள்.

இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக ஆனையிறவுச் சமரில் சாரணரின் பங்களிப்பு அமைந்தது. யாழ் ஆஸ்பத்திரியில் இருந்து ஆனையிறவுப் போர்க்களம் வரை சாரணர் கடமையில் ஈடுபட்டிருந்தனர். வீதி போக்குவரத்து, காயமடைந்தோரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லல், காயப்பட்ட போராளிகளைப் பராமரித்தல் போன்ற வேலைகளில் ஈடுபட்டனர். போராளிகளுக்கு உலர் உணவு சேகரித்து கொடுத்தனர். குண்டு வீச்சுகளின் மத்தியிலும் தற் துணிவுடன் பதட்டமடையாமல் கடமையில் ஈடுபட்டனர்.

இப்படியாக ஆபத்தில் உதவும் மனப்பான்மை, பதட்டமடையாமை, சுயநலமில்லாது பிறர்க்கென உழைக்கும் தன்மைகளை சாரணன் வளர்த்துக் கொள்வது அவசியமாகும்.

க. எல்லாளன்


# OUR LEADERS

## OUR TROOP LEADER




**Mas. M Jotheeswaran**
(President Scout)

## Asst. TROOP LEADER



**Mas. P. Saimaruhan**
(President Seout)

## QUARTER MASTER



**Mas. J. Atchuthan**
(Efficency Decoration)

# தென்னை மீது ஒரு பாச்சல்
# அதனால் ஏற்பட்ட காய்ச்சல

போர்கால சூழ்நிலையிலும் பாரபட்சமின்றி சேவை செய்வதே சாரணர்களின் வழக்கம். அந்த வகையில் 1991ம் ஆண்டு ஆவணி மாதம் கடும் போர் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது. யாழ் மாவட்ட சாரணர்களன்றி ஏனைய மாவட்ட சாரணர்களும் சேவைக்காக அழைக்கப்பட்டிருந்தது. அதன்படி நாங்களும் அவர்கள் அழைத்த தினத்தன்று சமூகம் கொடுத்திருந்தோம் அங்கே எமக்காக பல சேவைகள் காத்திருந்தன. வீதிஒழுங்கு, காயப்பட்ட மக்களை பராமரித்தல், துப்பரவு செய்தல் போன்றன. எம்மைப் போன்ற சாரணர்களின் சேவை யாழ்ப்பாணத்தோடு மட்டும் நின்றுவிடவில்லை. சாவகச்சேரி, மிருசுவில் பளை போன்ற பல இடங்களிற்கும் விஸ்தரிக்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி சாரண துருப்பைச் சேர்ந்த சாரணர்களாகிய நாங்கள் எல்லா இடங்களிலும் எமது சேவையை மேற்கொண்டோம். இதனால் பலரால் எமது துருப்பு பாராட்டுக்குள்ளானது, எமது சாரண சேவையானது பளையில் தேவைப்பட எமது சாரண தலையகம் எம்மில் சிலரை பளைக்கு செல்ல கேட்டிருந்தது. நாங்கள் சாரணர்கள் அதிலும் யாழ் இந்து சாரணர்கள் சொல்லவா வேண்டும் உடனேயே தயார் என பச்சைக்கொடி காட்டிவிட்டோம். அன்று இரவு எமது பயணத்தை ஆரம்பிக்க இருந்த வேளை அங்கு நிலைமை சரியில்லை எனக் கருதி எம்மை மறுநாள் செல்லும்படி சாரணர் தலைமையகம் தடைபோட்டது.

அன்று இரவு தலையகத்தில் ஒரே பரபரப்பு. இவர்கள் செல்ல ஆயத்தமாகும் இடம் போர் நடைபெறும் இடத்திலிருந்து 2 மைல் பிரதேசத்திற்குள்ளேயே உள்ளது. ஏதாவது பிரச்சனை வருமா என சேவைப் பொறுப்பாளர்கள் மத்தியில் கவலை நிறைந்திருந்தது. அக் கவலையை உணர்ந்த நாம் அந்தக் கணமே அவரின் கவலையைப் போக்கடித்து நாங்கள் சாரணர்கள் எதற்கும் ஆயத்தம் என்பதை உறுதியாகக் கூறினோம். எமது மகுடவாக்கியமே "எதற்கும் ஆயுத்தம்" பின் ஏன் இந்தக் கலக்கம் என கூறி எமது பயணத்தை உறுதியாக்கிக் கொண்டோம். எமது இந்த உறுதியாலும் சேவை மனப்பான்மையினாலும் எமது தலைமையகம் பெருமையும், மகிழ்ச்சியும் அடைந்து எம்மை வழியனுப்ப இணங்கியது.

மறுநாட் காலை 8 30 மணியளவில் எமது கல்லூரியைச் சேர்ந்த 20 சாரணர்கள் இப் பயத்திற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தோம் அதற்கு நானும் என்

சக சாரணனுமே பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்தோம். எம்மை அங்குள்ளவர்கள் மற்றும் சாரணர் தலைவர்கள் சாரணர்கள் உட்பட பலர் வாழ்த்தி வழியனுப்பி வைத்தனர்.

நாம் மிகவும் மகிழ்வுடன் எமது பயணத்தை ஆரம்பித்தோம். வழி நெடுகிலும் எமது சாரணர்கள் எம்மை கைகாட்டி பயணத்தை ஊக்குவித்தனர். சாரணர்கள் மட்டுமன்றி மக்களும் எமது பயணத்தை ஊக்குவிக்கும்படி எம்மை வழியனுப்பியும், கைகாட்டியும் அனுப்பினார்கள். ஆனால் அவர்களில் சிலர் எம்மை எமது சாரண உடையில் வித்தியாசமாகவும் பார்க்கத் தவறவில்லை. சாரணர்களான எம்மை இராணுவத்தைப் பார்ப்பதுபோல் அப் பார்வைகள் எமக்குத் தெரிந்தது. இச் செயல் எமக்கு பெரும் வேதனையை உண்டாக்கியது. ஏனெனில் சேவை நோக்கம் கொண்ட எம்மைக்கூட இவர்களுக்கு தெரியவில்லை. எனவே இவர்களுக்கு சாரணர்களைப் பற்றி நிச்சயம் அறிமுகப்படுத்த வேண்டும் எனும் எண்ணம் மனதில் உதிர்க்க எமது பயணத்தைத் தொடர்ந்தோம்.

களைப்பு, பின் இளைப்பாறல், சிரிப்பு, பேச்சு போன்றவற்றின் மத்தியில் எமது இருப்பிடத்தையடைந்தோம். பளை அரசினர் வைத்தியசாலை விடுதியே எமது இருப்பிடம். அங்கு களைதீர ஆற அமர்ந்துவிட்டோம்.

25 மைல் சைக்கிள் பயணம் அனைவரது முகங்களிலும் களைப்பு, முன்நின்றது. அத்துடன் பசி ஒருபுறம் மறுபுறம் தாகம். எமது துரதிஸ்டம் தண்ணீர் கிடைக்கும் அடையாளம் ஒன்றும் இல்லை. மாறாக சுற்றும் பூத்துக் குலுங்கும் இளநீர்க் குலைகள் அதனைப் பிடுங்கி எமது தாகத்தைத் தீர்க்கலாமா எனும் எண்ணம் மனதில் மேல் ஓங்கி அடுத்த கணமே தெரியாத இடம், என்ன செய்வார்களோ எனும் பயம் மனதை வாட்ட அந்த எண்ணமும் எமது மனதை விட்டு அகன்றது. அத்துடன் சேவைகளுக்காகவே நாம் இங்கு வந்துள்ளோம் பின் ஏன் வம்பில் மாட்டுவான் என்ற பீதியும் இணைந்து எமது தாகத்தைக் கட்டுப்படுத்தியது.

ஆனாலும் சில மணி நேரத்தின் பின் தாகமும், களையும் கட்டுப்படாமல் தலைவிரித்தாடியது அந்தச் சமயம் எமது சாரணர்களும் எமக்குத் தாகம் அதிகமாக இருக்கிறது என நச்சரித்தனர். அச்சமயம் தேங்காயைப் பிடுங்கி எமது தாகத்தைத் தீர்ப்போமா எனும் யோசனையை ஒரு சாரணன் முன் வைத்தான் அவ் யோசனையை ஏனைய சாரணர்களுக்கு மட்டுமன்றி எமக்கும் ஆசையைத் தூண்டியது. ஆனாலும் பயம். மீண்டும் மீண்டும் சாரணர்களின் வேண்டுகோளின் படி எமது பயத்தைப் பறக்கவைத்தது. ஆசை கொடிகட்டியது.

தேங்காயைப் பறிக்கும் ஆவல் அனைவரது உள்ளங்களிலும் உதிர்க்க நான் ஒருவரை அழைத்து ஓதுக்குப்புறமாக இருந்த தென்னைமரத்தைக்காட்டி நீ கவனமாக ஏறி இளநீர் பிடுங்கும்படி சொன்னேன். பின் அனைவரையும் தள்ளி நிற்கும்படி கூறிவிட்டு நானும், பிடுங்கும் சாரணனும், மற்றைய சாரணனும் தோட்டத்திற்குள் நுழைந்தோம். அச்சமயம் தோட்டத்தையும் எமது இருப்பிடத்தையும் ஒரு சிறு வீதி பிரிக்கின்றது. எனவே ஒரு சாரணனை அழைத்து நிற்கும்படியும் கூறினேன்.

தோட்டத்திற்குள் நுழைந்ததும் மரத்தில் ஏறச் சொன்ன சாரணன் கடகடவென குறிப்பிட்ட மரத்தில் ஏறிவிட்டான். இளநீர் தேங்காய்கள் அவனது கத்தி வெட்டுக்குள்ளாகி வீழ்ந்துகொண்டிருக்கின்றன. கீழேவிழும் தேங்காய்களை எடுத்துச் சென்று போவதற்கு ஏற்கனவே இருவரை நியமித்திருந்தோம். அதன் படி அவர்களும் தங்களது கடமைகளைச் சுறுசுறுப்பாகச் செய்து கொண்டிருந்தனர். பத்தாவது தேங்காய் விழுந்து பதினொராவது தேங்காய் விழ முனைந்த போது ............... ?

தோட்டக்காவலாளி உள்ளே நுழைந்து விட்டார். ஆனால் எமது அதிஸ்டம் அவர் எம்மைக்காணவில்லை. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மரத்திலுள்ள சாரணனிடம் கூறினோம் இனிக்காணும் மெதுவாக இறங்கி கீழே வா என்று

எமது விதி, அவனுக்கு கீழே இறங்கு என்று சொன்னது கீழே இன்னும் போடு எனக்கேட்கவே அவனும் தனது கைவசத்தைக் காட்ட ஒரு தேங்காய் ''தொம்'' எனும் சத்தத்துடன் விழுந்தது. எமக்கோ ஆச்சரியமும், ஆத்திரமும் குமுறிக்கொண்டு வந்தது நாங்கள் போடவேண்டாம் எனக் கூற இவன் என்ன இன்னும் வெட்டுகிறான் எனும் நினைவில் மீண்டும் அதையே கூறினோம். அது செவிடன் காதில் சங்கு ஊதியது போல் மீண்டும் 2 தேங்காயை விழுத்த காவலாளி சத்தம் கேட்ட திசையை நோக்க அங்கே நாங்கள் சாரண உடையில் நிற்க குழம்பியவாறு எம்மைநோக்கி வரலானான்.

எமக்கோ குல நடுக்கம் அடிக்க எமது கால்கள் கூட நிலைமை மோசமாகிக் கொண்டிருந்தது. எனவே மற்றைய சாரணனிடம் வா என்று சமாளிப்போம் எனக் கூறி அவரை நோக்கி தள்ளாடித் தள்ளாடிச் சென்றோம். எமது உடையைக் கண்ட அவர் முதலில் குழம்பியவர் பின்னர் எமது வெகுண்ட முகத்தைக்கண்டு அவர் துணிந்து விட்டார் போலும்.

''ஐயா நாங்கள் சாரணர்கள். நாங்கள் இங்கு சேவைக்காகவே வந்துள்ளோம். உங்கள் தோட்டத்திற்கு முன்பே நாங்கள் தங்கப்போகின்றோம். ஒரே பசி, தாகம் என்று விக்கி விக்கி எமது தவிப்பை விபரித்தோம். அவரும் ஏதோ ஒருவாறு எமது தவிப்பை உணர்ந்தார் போலும். இது என் தோட்டமல்ல, நான் வெறும் காவலாளியே. என் முதலாளி கண்டால் எனது வேலைக்கு முற்றுப் புள்ளி வைத்து விடுவார். அதுதான் என்று அவரும் தனது அவல நிலையை விபரித்தார். நாங்கள் அவரின் நிலையை உணர்ந்தும் ஏற்கனவே எம்மிடம் இருந்த தேங்காயையும் கொடுத்து கீழே இருந்த 3 தேங்காயையும் கொடுத்து இந்தாருங்கள் எமக்காக உங்களின் வேலையை இழக்கவேண்டாம் எனக் கூறினோம்,

ஆனால் நீங்கள் தாகத்துடன் இருக்கின்றீர்கள் இதைக் கொண்டுசெல்லுங்கள் என்றுகூற எமக்கு முக்காலவாசி மகிழ்வு கால்வாசி மனத்துடன் இல்லை வேண்டாம் ஐயா எனக் கூறினோம். ஆனாலும் அவர் விடவில்லை இல்லைத் தம்பி பரவாயில்லை எனக் கூறிச் சென்றுவிட்டார்,

''அப்படியே'' ஒரு மாதிரி நாமும் தேங்காயும் பிழைத்தோம் எனும் நோக்கோடு வெற்றிச் சிரிப்போடு எமது இருப்பிடத்தை அடைந்தோம். அப்பொழுது தான் எமது தாகம் மறைந்து விட்டது போன்ற பிரமை எம் அனைவரின் மனதிலும் உதிர்த்தது.

அன்றில் இருந்த இந் நடவடிக்கை எமது சாரணர்களால்
தென்னை மீது ஒரு பாய்ச்சல் என வர்ணிக்கப்பட்டது.

**ப. சாய்மருகன்**
**உதவி துருப்புத் தலைவர்.**

# சாரணியமும் சமுதாயமும்

றோபேட் ஸ்ரீவின்ஸ் சிமித் பேடன் பவல்பிரபு அவர்களால் சாரணிய இயக்கம் சாரணியக் கல்வி சம்பந்தமான ஓர் இயக்கமாகும். இது சிறுவர்களைத் தாம் வாழும் சமூகத்திற்கு ஓர் உபயோகமுள்ளவனாகவும் பொறுப்புணர்ச்சியுள்ளவனாகவும் ஆக்கும் அத்துடன் நாம் தன்கடமை, சமயக்கடமை பிறருக்கு வேண்டிய கடமைகளைச் செய்ய எந்நேரமும் ஆயத்தமாயிருக்கவேண்டும்.

இக் குறிக்கோளை அடைய சாரணியத்தில் பலவகைப் பயிற்சி முறைகள் கையாளப்படுகின்றன. அதில் சமூகசேவையும் ஒரு முறையாகும். இதனை பணி தர்களில் பலர் விரும்புவதில்லை. இது மற்றைய முறைகளிலும் விட சாரணிய இலட்சியங்களை மிகச் சிறப்பாகவும் கருத்தாகவும் ஆக்கமுடியும் குருளைச்சா ணர் வாக்குறுதியில் "ஒவ்வொரு நாளும் ஒரு நற்பணி புரிகுக" என்றும் சார ணப் பிரமாணம் "எக்காலமும் பிறருக்கு உதவி புரியவும்" என்றும் கூறுகின் றன. அவர்களின் மகுட வாக்கியமும் இக் கருத்தையே புகுத்துகின்றது எனவே ஒவ்வொரு சாரணனும் சமூகப்பணியில் ஈடுபடவேண்டுமென்பது தெளிவு


ஏற்கனவே இருக்கும் முன்னேற்றப் பயிற்சித் திட்டத்தைப் பார்த்தால் முதலாம் தரச்சின்னம் பெற சாரணன் 24 மணிநேர சமூகசேவை செய்யவேண்டும் ஜனாதிபதிச் சின்னம் பெற மீண்டும் 72 மணிநேர சமூகசேவை அவசியம். ஒவ்வொரு பிரிவினருக்கும் இது அவர்களின் வயதிற்கேற்ப வேறுபடும். சாரணியம் பிறருக்குத் தனித்தோ, குழுவாகவோ சேவைசெய்வதற்கென்றே இயங்குமோர் இயங்குமோர் இயக்கமாகும். சமுதாயத்திற்கு செய்யும் சேவை ஒருவர் தன்னம்பிக்கை வளர்த்து சமுதாயத்தோடு ஒத்துழைக்கும் இயல்பையும் ஐக்கியத்தையும் கொடுக்கிறது. எனவே பாசறை வாசம் சாரணியத் தொழிற்பாடுகளை விட சமுதாயத்திற்கு செய்யும் தொண்டு சாரணர் தமது குறிக்கோளை அடைய மிகச் சிறந்த வகையில் உதவிபுரிகின்றதென்பது புலனாகும்.

பாசறை வாழ்க்கையில் சாரணன் எவ்வாறு எத்தகைய நிலமைகளைச் சமாளிக்கச் சிறந்த முடிவெடுக்க ,சிறந்த ஆற்றல்களையும், நிலைமைகளையும் பழகி வளர்க்க முடிகிறதோ அவ்வாறே சமூக சேவையில் ஈடுபடும்போது சமுதாயம் மட்டும் நன்மை பெறவில்லை, சாரணனும் தன் சொந்த முன்னேற்றத்திற்கான ஓர் அனுபவரீதியான ஆற்றலையும் பெறுகின்றான். சமூகசேவை மூலம் நாட்டின் எதிர்காலத்தை சந்தோசமாயும் அங்குள்ளவர்களை ஆரோக்கியம் உள்ளவர்களாகவும் சகல வளமும் பெற்று வாழ வழிவகுக்கலாம். சாரணியம் சமுதாயத்திற்குச் செய்யும் சேவையைப் புரிந்துகொண்டு சமுதாயம் அதற்குத் தேவையான ஒத்துழைப்புகளை மீண்டும் மீண்டும் நல்கினால் மேலும் பெரும் வளர்ச்சி பெரும் வளர்ச்சி பெற்றுக்கொண்டே இருக்கும்,

வாழ்க! சாரணியம்
வளர்க! அதன் சமுதாயத்தொண்டு.

**சின்னத்தம்பி கங்கா**
**ஆண்டு. 8 'C'**

# *PATROL LEADER'S COUNCIL*



L —> R

**M Jotheeswaran**
**P- Saimaruhan**
**N- Gowrithasan**
**J- Atchuthan**
**T- Niraj**
**G- Thirukkumaran**
**V- Prasath**
**S- Srithar**
**S- Gang a**

# அணி திரண்டு செல்லடா

ஆரணிய வாழ்க்கை விரும்பி
சாரணியத்தில் இணையடா
தேறி அணியாய்த் திகழ்ந்துமே—சேவை
தேசம் பெற்றிட உழையடா.

பேடன் பவல் ஆனவர்
பெருமையுடன் தொடங்கிய
பாடும் பறவைகளினாலான
படையுடனே சேரடா

கடமை கண்ணியம் கட்டுப்பாடு தன்னை
உடமை யாகக் கொண்ட படைதன்னில்
அடிமை வாழ்வை உடைத்தெறிய
அணி திரண்டு செல்லடா.

சேவை தனைச் செய்துமே
கோவையாக்கிக் கொள்ளவே
சாவின் பின்பும் வாழவே
சாரணியத்தில் சேரடா.

பாசலறை வாழ்க்கையதனாலே
அகம் மகிழ்ச்சி கொள்ளுமடா
பாகம் பண்ணிப் பகிர்ந்துண்டு
பாரினைப் போற்றி வாழடா.

சாரணிய வாழ்க்கையில் அவைவரும் இணைந்து வாழ
சாரணிய இயக்கமதில் சார்ந்து சேர்ந்து கொள்ளடா—மக்களை
பேரணியாய் ஆக்கிப் பெருமை சேர்த்துக் கொண்ட
சாரணிய இயக்கமதை சான்ற முறையாய்க் கொள்ளடா

சாரணயம் வாழ்க. சரித்திரம் படைத்திடுக
ஆரணிய வாழ்க்கையில் அனைவரும் இணைந்து கொள்ளுக
சார் அணியாய்க் கொண்டுமே
சரித்திரம் படைக்க விரைந்திடுக.

# "சாரணர் தந்தை பேடன் பவல் பிரபுவின் இறுதிச் செய்தி"

அன்புடைச் சாரணரே,

"பீட்டர் பான் என்னும் நாடகத்தை நீங்கள் எப்போதாவது பார்த்திருப்பீர்களானால் அதில் கொள்ளைக் கோஷ்டித் தலைவன், தான் இறக்கவேண்டிய நேரம் வந்து அப்படி இறக்கும் போது தன் உள்ளத்தில் உள்ளவற்றை வெளிக்கூற போதிய அவகாசம் கிடைக்காது போய்விடுமெனப் பயந்து, எப்பொழுதும் தனது இறுதிப் பிரசங்கத்தைச் செய்வதை நீங்கள் உங்கள் ஞாபகத்தில் கொண்டிருப்பீர்கள். இந்த நேரத்தில் யான் இறக்காமல் விடினும் என் நிலைமையும் அதனையே பெரிதும் ஒத்துள்ளது. ஏனெனில் வரும் நாட்களில் ஒரு நாள் நான் இறக்க நேரிடும் ஆகையால், நான் உங்களை விட்டுப் பிரிவதன் முன்னர் உங்களுக்கு என் அன்பு வார்த்தை ஒன்றைக் கூற விரும்புகின்றேன்.

என்னிடமிருந்து நீங்கள் இறுதியாகக் கேட்கக்கூடியது இதுவேயாமென்பதை ஞாபகத்தில் கொள்க. ஆகவே மீண்டும், மீண்டும் சிந்திக்குக.

மிக்க சந்தோஷமான வாழ்க்கையை நான் அனுபவித்துள்ளேன். அதே போன்று உங்களில் ஒவ்வொருவரும் இன்ப வாழ்வு வாழவேண்டுமென்று நான் நினைக்கின்றேன்.

சந்தோஷகரமாகவும் வாழ்க்கையை இன்பத்தோடு அனுபவிக்கவும் கடவுள் எங்களை இவ்வுலகில் படைத்தளித்தான் என்று யான் நம்புகின்றேன். பணக்காரனாக இருப்பதினாலோ வாழ்வுப் பாதையில் வெற்றி பெற்றதனாலேயோ அல்லது சுயமாக மட்டில்லா இன்பம் அனுபவிப்பதனாலோ சந்தோஷம் வந்துவிடாது, சிறுவனாக இருக்கும்போதே உங்களை ஆரோக்கியமுள்ளவனாகவும் திடமுடையோனாகவும் ஆக்கிக் கொள்வதே உங்கள் இன்பத்திற்கு முற்படியாகும். அப்பொழுதுதான் நீங்கள் பிரயோசனமுள்ளவர்களாகவும் மனிதப் பராயம் அடையுங்கால் வாழ்க்கையை அனுபவிக்கக் கூடியவர்களாகவும் மாறமுடியும்.

நீங்கள் இன்பவாழ்வு வாழ்வதற்கு உலகம் முழுமையிலும் அழகியனவும் அற்புதங்களுமான பொருட்களை இறைவன் படைத்தருளியுள்ளான் என்பதை இயற்கைப் பாடம் உங்களுக்கு எடுத்துக்காட்டும் போதுமென்ற மனமே உங்களுக்குப் பொன் செய்த மருந்தாயிருத்தல் வேண்டும். கிடைத்தன கொண்டு தகுந்தன ஆற்றும் உலக செயல்களின் இருளகத்தை விட்டு ஒளியகத்தை நாடுக

உலகிலுள்ள மற்ற மக்களுக்கு இன்பத்தைக் கொடுப்பதன் மூலமே உண்மை. இன்பத்தை யாம் பெறமுடியும். இவ்வுலகை நீங்கள் கண்டதினும் பாக்க ஓரளவாவது நல்ல நிலைமைக்குக் கொணர்ந்துவிட முயற்சிக்கவும். அப்போ நீங்கள் இறக்குங்கால் நம் பொன்னான பொழுதை வீண்பொழுதாக்கா வண்ணம் திறம்பட உழைத்ததான திருப்தி ததும்பும் இன்ப உணர்வோடு விண்ணுலகு புக முடியும். மகிழ்ச்சியாக வாழ்ந்து இன்ப நிலையில் இருப்பதற்கு என்றும் தயாராக இருக்கவும், சிறாராகவிருக்கும் காலம் கடந்த பின்பு எவ்விடத்தும் நம் சாரணப் பிரதிக்ஞையைக் கடைத்தொழுகுக இங்ஙனம் நடக்க இறையருள் என்றும் மலிக.

உங்கள் அன்பன்,

**ஒப்பம்: இல்வெல்-பேடன் பவல்.**



DIAMAND JUBILEE SCOUT TROOP IN 1991



OUR FIRST SEA SCOUT TROOP IN 1991



அத
மாவ
நிகழ
கருபி
ஆர
யாவ
தார
ரைச
யாக
விட்
யாழ

யாக
சம்ப
யாழ

# மாவட்ட 75 வது ஆண்டு

75 வது ஆண்டு நிறைவினை முன்னிட்டு நிறைவு பெறும் கல்லூரிகள் அதனை 17. 10. 91 அன்று யாழ் மத்திய கல்லூரியில் அனுஷ்டித்தனர். யாழ் மாவட்ட சாரணர் கிளைச் சங்கமும், சாரணர் கிளைச் சங்கமும் இணைந்து மேற்படி நிகழ்வை நடத்தினர். யாழ் அரச செயலகத்துக்கு முன்னுள்ள சாரணர் சிலைக் கருகில் யாழ்மாவட்ட பாடசாலையில் சாரணர்கள் அனைவரும் (குறிப்பாக ஆரம்ப ஐந்து பாடசாலைச் சாரணர் குழு) ஒன்றுகூடினர். மாவட்ட சாரண ஆணையாளர் திரு ஆ.சுப்பிரமணியம் மாலையணிவித்து ஊர்வலத்தை ஆரம்பித்து வைத்தார். இரு பிரிவாகச் சென்ற சாரணர்கள் கச்சேரி நல்லூர் வீதி வழியாக முத்திரைச் சந்தியை அடைந்து நல்லூர் கோவிலை தரிசித்து பின்பு நாவலர் வீதிவழியாக யாழ் இந்துக்கல்லூரியை அடைந்து அங்கு கல்லூரிக் கொடியினை ஏற்றிவிட்டு காங்கேசன்துறை வீதி வழியாக ஆஸ்பத்திரி வீதியை அடைந்து பின்னர் யாழ் மத்திய கல்லூரியை அடைந்தனர்.

இரண்டாவது பிரிவு கண்டி வீதி வழியாகச் சென்று பழய பூங்கா வீதி வழியாக பரியோவான் கல்லூரியில் கொடியேற்றிவிட்டு பிரதான வீதியூடாக புனித சம்பத்தரிசியார் கல்லூரியை அடைந்து கொடியேற்றிவிட்டு பிரதான வீதியூடாக யாழ் மத்திய கல்லூரியை அடைந்தது.

கொக்குவில் இந்துக் கல்லூரி பாண்ட் வாத்தியத்துடன் பிரதம விருந்தினர்களை அழைத்துச் சென்று,

திரு சோழன் அவர்கள் தேசியக் கொடியினை ஏற்ற முன்னாள் மாவட்ட சாரண ஆணையபளர் சாரணர் கொடியினை ஏற்ற.

1. யாழ் மத்தியகல்லூரி — திரு சண்முகநாதன்
2. பரியோவன் கல்லூரி — திரு. தனபாலன்
3. யாழ்ப்பாணக் கல்லூரி — திரு. எஸ். ஜெபநேசன்
4 யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி — திரு. அ. பஞ்சலிங்கம்
௫ புனித சம்பத்தரிசியர் கல்லூரி — திரு. மைக்கல் யோசவ்

ஆகிய 5 அதிபர்களும் தமது கல்லூரிக் கொடியினை ஏற்றினார்கள்.

உதவி மாவட்ட ஆணையாளர் திரு. டோறஸ் இராஜசிங்கம் வரவேற்புரையை வழங்கி உபதலைவர் திரு. சி. வி. கே. சிவஞானம், அதிபர்கள் சார்பில் யாழ் மத்திய கல்லூரி அதிபர் திரு. சோழன் ஆகியோரும் உரையாற்றினர். சாரணாளர் சங்க செயலர் திரு. கே. நடராசா அவர்கள் முதல் தபால் உறைகளை அதிபர்களுக்கு விநியோகித்தார். சாரணர் சங்க செயலர் திரு, பொ. ஸ்ரீஸ்கந்தராசா நன்றியுரை வழங்கினார். உதவி மாவட்ட ஆணையாளர்கள் திரு. எஸ்,தேவரஞ்சன், திரு. ஆர். இராஜ்குமார் ஆகியோர் இவ் வைபவம் சிறப்புற ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தனர் உதவி மாவட்ட ஆணையாளர் பயிற்சி திரு. என். நல்லையா பல்வேறு கருமங்களுக்குப் பொறுப்பாகவிருந்தார். தேனீர் விருந்துடன் ஆரம்ப அனுஷ்டிப்பு விழா இனிது நிறைவேறியது.

24.10.91 அன்று யாழ் கொக்குவில் இந்துக்கல்லூரியில் பதில் மாவட்ட ஆணையாளர் திரு இ. மகேந்திரன் அவர்கள் தலைமையில் 75 வது ஆண்டின் அனுஷ்டிப்பு முடிவு விழா நிறைவேறியது.

பொ. ஸிறீஸ்கந்தராஜா

---

ஒரு நல்ல இலட்சியத்துடன் முறையான வழியைக் கைக்கொண்டு தைரியத்துடன் வீரனாக விளங்கு நீ மனிதனாகப் பிறந்திருக்கின்றாய் நீ வாழ்ந்து மறைந்ததற்கு உன் பின்னால் ஓர் அழியாத அறிகுறி எதையாவது விட்டுச்செல்

சுவாமி விவேகானந்தர்.

---

# OUR TROOP - 1992



இடமிருந்து — வலம்

த. தவசுதன், இ. டட்லி, ஜெ. பிரசன்னா, ஜெ. பிரசன்னா, பொ. முருகதாஸ்

இருப்பவர்கள்

ந. கௌரிதாசன், க. விக்னேஸ்வரன் (சா.த.), அ. பஞ்சலிங்கம் (அதிபர்)
மு. ஜோதீஸ்வரன் (து. த.), பொ. சிறிஸ்கந்தராசா (கு. சா. த.)
ந. சோமசுந்தரம் (பிரதி அதிபர்), ப. சாய்மருகன் (உ. து. த.), ஜெ. அச்சுதன்

நிற்பவர்கள்

து. நிராஜ், ச: நிமலநேசன், க. திருக்குமரன், சி. கங்கா, ர. பிரசாந்தன்,
ச. சஞ்சீவன், கோ. நடேஸ்வரன், க. எல்லாளன், கி. கோகுலன், தி. லக்ஸ்மன்
வே. ஜெயக்காந்தன், க. ரூபசுந்தர், வி. புருஷோத்மன், சு. இளங்குமரன்
வி. பிரசாத், சி. சிறிதர், சு. ஜனார்த்தனன், க. வாசன்சுஜீத், சி. சிறிகரன்
கு. பார்த்தீபன்
சமுகமளிக்கவில்லை

# OUR GROUP

## 4th JAFFNA SCOUT TROOP

Principal
(Mr. A. PANCHALINGAM)

Co - Odinator Activities
(Capt N. SOMASUNDARAM)

Adviser
(Mr. N. NALLAIAH)

Group Scout Leader
(P. SRISKANTHARAJAH)

Scout Leader
(Mr. K. VIKNESWARAN)

Sea Scout Leader
(Mr. N. THANKAVEL)

Rover Scout Leader
(Mr. P. VILVARAJAH)

Cub Scout Leader
(Mr. P. MUTHTHUKUMARAN)

Instructors:- Mas. K. SATHAIJAN
Mas. S, CHEVEL

Troop Leader:- Mas. M. JOTHEESWARAN

Asst Troop Leader:- Mas. P. SAIMARUHAN

Asst Troop Leader (Sea) K. THASJANTHAN

Quarter Master:- Mas. J. ATCHUTHAN

# SCOUT'S

## SENIOR PATROL

### HARICHANDRA PATROL

N. Gowri thasen [P. L]
G. Partheepan [A P. L]
S. Sriharan
T. Luxmanan
S. Sriskanthapalan
T. Selvamanokaran
R. Dadley

### PEACOCK PATROL

T. Niroj [P. L]
R. Ellalan [A.P.L]
V. Prusothaman
G. Nadesvaran
M. Babujec
A. Sananthanan
S. Juds Rajith
P. Vijeithap
M. Thivakaran

### COCKERALS PATROL

V. Prasath [P. L]
S. Sangeevan [A. P. L]
S. Gagandran
P. Murugathas
S. Vasan shujeeth
R. Prasanthan
S. Maruthoora
R. Kamalathasan
T. Ramanan

## SENIOR PATROL

### WOOD PECKERS PATROL

G. Thirukumaran [p. L]
A. Jenarthanan [A. P. L]
T. Thavasuthan
A. Ilankkumaran
S. Rubasunthar
G. Karthik
V. Kanthappa
V. Thirukmaran
S. Pratheep

## JUNIOR'S PATOL'S

### PARROT PATROL

S. Srithar [P. L]
V. Jeyakanthan [P. A. L]
M. Nesakanthan
M. Piragalathan
N. Gagandran
S. Thusyanthan
A. Jasinthan
A. Donald Roobahan
M. Mayoonthan

### FALCON PATOL

G. Ganga [P. L]
K. Kokulan [A. P. L]
S. Elilmenan
P. Rasakumaran
M. Mayooran
N. Uma suthan
R. Uruthina Rodsan
K. Jegan
S. Prathepan

# SEA SCOUT

A. Rayavan
P. Satheesan
T. Mohanaruban
S. Subokaran
K. Koctheesan
R. Nirmalan
P. Sutharsan
K. Vijitharan
K. Manikandan
A. Lathuraj
K. Sujeevan
S. Sivasenkar
K. Sojeenthiran
T. Thiruchenthuran

# CUB'S PACK

S. Arulkumaran
S. Sivpirian
S. Piriatharsan
M. Tharanitharan
B. Balarajan
S. Sunanthan
V. Jathogan
V. Aravinthan
S. Mubunthan
S. Selvanioa
S. Thanuraj
T. Sasirankan
M. Thvsuanthan
S. Koneswaran
T. Sailandran
M. Kugenthiran
A. Katheeswaran
T. Sumon

# ROVER CREW

R. Ramanan
K. Srimohanan
K. Sriparan
N. Mohaneswaran
K. Karthikeyan
S. Pathmanathan
M. Patrick Diranjan

★ ★

| | | |
|---|---|---|
| Service | — | சேவை |
| Character | — | நன்நடத்தை |
| Obedient | — | பணிவு |
| Unity | — | ஐக்கியம் |
| Truth | — | நேர்மை |

# சாதனைப் பாதையிலே நாம்...............

1963 அகில இலங்கை சாரணர் போட்டியில் முதலாவது இடத்தைப் பெற்று தனது சாதனை முத்திரையைப் பதித்துவைக்கத் தொடங்கியது. தீவின் தலைமைக் கொடியினை சுவீகரித்துக் கொண்டது யாழ் மாவட்டத்தில் முதலிடம் றோட்டறிக் கேடயம் எமது மூத்தோர் கையில், குருளையர் போட்டியில் முதலிடம்.

1964 அகில இலங்கை சாரணர் போட்டியில் இரண்டாமிடம் யாழ் மாவட்டப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று றோட்டறிக் கேடயத்தை மீண்டும் பெற்றோம். முதலுதவிப் போட்டிக்கு தினகரன் வெற்றிக் கேடயம்.

1965 யாழ்ப்பாணப் பட்டிணப் பாடசாலைகள் போட்டியில் முதலிடம். முதலுதவிப் போட்டியில் தினகரன் வெற்றிக் கேடயம்.

1971 யாழ் மாவட்டப் போட்டியில் றோட்டறிக் கேடயத்தைப் பெற்றுக் கொண்டோம்.

1972 றோட்டறிக் கேடயத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

1973 றோட்டறிக் கேடயம் பெற்றுக்கொண்டோம்.
1974 " " "
1975 " " "
1976 " " "
1977 " " "
1978 " " "
1979 " " "
1980 " " "
1981 " " "
1982 " " "

1983 மாவட்ட போட்டி நடைபெறவில்லை.
1984 " " "

1985 மாவட்டப் போட்டியில் மூன்றாம் இடம்

1986 றோட்டறிக் கேடயம் மீண்டும் எமது கையில்


1987 மாவட்டப் போட்டிகள் நடைபெறவில்லை
1988 " " "
1989 ...... " "
1990 ...... " "

1991 பேடன் பவல் தினப் போட்டியில் மூன்றாமிடம் சச்சி வரதர் கிண்ணத்துக்கான துடுப்பாட்ட போட்டியில் முதலாமிடம்

1992 பேடன் பவல் தின மாவட்டப் போட்டியில் முதலாமிடம் சச்சி—வரதர் நினைவு துடுப்பாட்டப் போட்டியில் மூன்றாமிடம்




## *EDITORS*



**Mas. S. Sriharan** **Mas T Luxmanan** **Mas. G. Partheepan**

## *OUR CUB PACK IN 1991*



Spoce Donated

by

**LINGAM COOL BAR**

52, CLOCK TOWER ROAD,

JAFFNA.

*Dealers in*

★ **Fancy Goods,** ★ **Presentation Articles,**
★ **Stationaries,** ★ **Groceries,**
★ **Sports Goods,** ★ **Rice Huller,**
★ **Grinder & Spare Parts,** ★ **Essences,**
★ **Fruit Drinks & Sundries Etc, Etc.**

# RAJU STORES

**RAJU BUILDING,**

67, 69 Kasthuriar Road, Jaffna.

Phone: 22372 Grams: "RAJU"

---

★ பலசரக்குப் பொருட்கள்,

★ பால்மா வகைகள்

சில்லறையாக விற்பனை செய்யப்படும்

## ரூபன் வர்த்தக நிலையம்

91, திருநெல்வேலி சந்தை, யாழ்ப்பாணம்.

அன்றும் இன்றும் என்றும் படப்பிடிப்பில் முன்னோடிகள்

பாரத் ஸ்ரூடியோ

82/1 & 2 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நங்கையர் விரும்பும் நவநாகரீகமான
புடவைத் தினிசுகள், கூறைச் சேலை வகைகள், கைத்தறி
புடவை வகைகள் போன்றவற்றிற்கு
புகழ் பெற்ற ஸ்தாபனம்.

நியூ சண்முகானந்தா புடவையகம்

23. பெரியகடை, யாழ்ப்பாணம்.

அன்பளிப்பு

சிறி விக்னேஸ்வரா களஞ்சியம்

148. கண்டி வீதி. சாவகச்சேரி.

அன்பளிப்பு

வீ. எம். கே. ஜுவல்லர்ஸ்

தங்க, வைர நகை வியாபாரம்

கண்டி வீதி, சாவகச்சேரி.

உங்கள் மழலை செல்வங்களை உயிரோவியமான படங்களுக்கு



## பேபி போட்டோ படப்பிடிப்பாளர்

பலாலி ரோட், திருநெல்வேலி.

---

அன்பளிப்பு

## சிங்கம்ஸ் பிடவையகம்

172 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்

---

★ **கலர், கறுப்பு வெள்ளை புகைப்படசேவை**

★ பாஸ்போட், அடையாள அட்டை படங்கள்,
★ யாழ் / கொழும்பு புகைப்படச்சுருள் பிரதி செய்து கொடுத்தல்,
★ உங்கள் மங்கள நிகழ்ச்சிகளை சிறந்த முறையில் நிறைந்த திருப்தியுடன் படம் பிடித்திட

## கே. எஸ். ஆர். போட்டோஸ்

இல. 766 கே. கே. எஸ். வீதி,
தட்டாதெருச் சந்தி,
யாழ்ப்பாணம்

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சாரணர் குழு ஒளிக் கதிர்கள்

1910 அதிபராகவிருந்த திரு. B. சஞ்சீராவ் அவர்களால் சாரணிய அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.

1916 யா / சம்பத்தரிசியார் கல்லூரி, யா / பரியோவான் கல்லூரி, யா / மத்திய கல்லூரி, யா / யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி. ஆகிய 5 பாடசாலைகளிலும் காலிறிச்மன்ட் கல்லூரி சாரண ஆசிரியரான திரு. J. V. மென்டிஸ் அவர்களால் அங்குரார்ப்பணஞ் செய்து வைக்கப்பட்டது. 21 சாரணர்கள் எமது குழுவில் முதலில் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அங்குரார்ப்பணம் செய்து வைத்த திரு. J.V மென்டிஸ் அவர்களுக்கு 75 வது ஆண்டு காணும் சாரணராகிய நாம் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

1918 கண்டியில் நடைபெற்ற அகில இலங்கை சாரணிய ஜம்பொறியில் கலந்துகொண்டனர்.

1919 1. 10. 19 இல் உதவிக் குடியேற்ற சாரண ஆணையாளர் J. H. டிரேசம் கல்லூரிக்கு விஜயம் செய்தார்.

1921 கொழும்பில் நடைபெற்ற அகில இலங்கை சாரணிய ஜம்பொறியில் எமது குழு கலந்துகொண்டது.

1923 ஓநாய் குருளையர் ஆரம்பிக்கப்பட்டது. அகில இலங்கை சாரணிய ஜம்பொறியில் 8 பேர் பங்கு கொண்டனர். எமது சாரண ஆசிரியர் M.சபாரத்தின சிங்கி உதவி மாவட்ட ஆணையாளரானார்.

1925 சென்னையில் நடைபெற்ற உலக சாரணிய ஜம்பொறியில் எமது சாரணன் திரு. R.ரங்கநாதன் பங்குபற்றினார். -பத்தாவது ஆண்டு பூர்த்தி விழா.

1934 பேடன்பவல் பிரபுவை வரவேற்க அகில இலங்கை சாரணர் மகாநாட்டிற்கு எமது குழுசென்றது.

1935 எமது குழு சிவனொளிபாத மலைக்குச் சுற்றுலாவை மேற்கொண்டது. -இருபதாவது ஆண்டு பூர்த்தி விழா.

1936 வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான சாரணர் குழுக்களுக்கிடையிலான போட்டியில் 2ம் இடத்தைப் பெற்றோம். அப்போதிருந்த குழுத் தலைவர் திரு. T. கனகராசா எமக்கு இப்போதும் ஊக்கமளித்து வருபவர். 1992 ஆம் ஆண்டில் பேடன் பவல் தின விழாவிற்கு பிரதம விருந்தினராக அழைத்திருந்தோம்.

இவ்வாண்டில் குருளையர் ஆசிரியராகவிருந்த திரு. V. சுந்தரராசாவை 62 வது சாரணர் ஆண்டு விழாவிற்குப் பிரதம விருந்தினராக அழைத்திருந்தோம். இவரால் குருளையர் டைசன் றோற்றம் போல் சுவீகரிக்க வழிகாட்டப்பட்டது. சாரணிய வளர்ச்சிக்கு உதவியவர்களை நாம் பேணி வருகின்றோம்.

1940 திரிசாரணர் குழு ஆரம்பிக்கப்பட்டதையடுத்து 5 திரிசாரணர்கள் கொழும்பிற்குப் பயிற்சிக்குச் சென்றனர். - கால் நூற்றாண்டு நிறைவு.

1942 2 வது உலக மகா யுத்த காலத்தில் யாழ் பிரதேச மக்களின் பாதுகாப்பிற்கு உதவ ஆலோசனை வழங்க பாதுகாப்புப் பயிற்சியினை சாரணர் பெற்று சமூகத்திற்குச் சேவை செய்தனர்.

1944 1947 திரு. C. குமாரசாமி [பழைய மாணவன்] யாழ்ப்பாண சாரணர் சங்கத் தலைவரானார்.

1946 1948 திரு. T. முத்துசாமிப்பிள்ளை [பழைய மாணவன்] யாழ் மாவட்ட சாரண ஆணையாளர் ஆனார்.

சுதந்திரத்திற்குப் பின்............

1949 யுத்த காலத்திற்குப் பின்பு சாரணர் அமைப்பு சீர்திருத்தி அமைக்கப்பட்டது.

1950 மாட்சிமை தங்கிய மகா தேசாதிபதிக்கு மரியாதை அணிவகுப்பில் கலந்து சிறப்பித்தோம். "இலட்சியவாதி" நாடகம் இருமுறை சாரணர்களால் மேடை ஏற்றப்பட்டது. - 33 வருட நிறைவு.

1954 1964 திரு. M. ஸ்ரீகாந்தா [பழைய மாணவன்] சாரணராளர் சங்கத் தலைவரானார்.

1959 யாழ் வைத்தீஸ்வர வித்தியாலய ஆசிரியர் E. R. வில்லியம்ஸ் எமது சாரணர் குழுவிற்குப் பயிற்சி அளித்து உதவினார். அவருக்கு 75 வது ஆண்டுக் குழுவினரும் சாரணர் குழுத் தலைவரும் நன்றியைத் தெரிவிக்கின்றனர்.

1960 ஜுப்பிலி மண்டபத்தில் சாரணர் அறை அமைத்தமை ஆனைக்கோட்டையில் முதலாவது சாரணர் முகாம் அமைத்தமை, கச்சேரி பழைய பூங்காவில் சாரணர் விழா.

1961-62 திரு. S. V. சோமசேகரம் [முன்னாள் சாரண ஆசிரியர்] யாழ்-சாரண சங்கத் தலைவர் மேலும் 4 சிரேஷ்ட சாரணிய அணிகள் திருவாளர்கள் குமாரசாமி அணி, ஜயவீரசிங்கம் அணி, சங்கரப்பிள்ளை அணி, நாகலிங்கம் அணி எனப் பெயரிட்டு திரு. V. சுப்பிரமணியம் கௌரவித்தலுடன் கிளிநொச்சியில் சாரணர் பாசறையும் முதலுதவி வகுப்புக்களையும் நடத்தினர்.

1962 சாரணியர் சங்கப் பொன்விழாவில் பங்கு கொண்டோம்.

1963 அனுராதபுர ஜம்பொறியில் கலந்துகொண்டோம், உணவுப் பயிர்கள் பயிரிடுவதில் பங்கு கொண்டோம்.

1964 அகலபாத் அகிலபாரத சாரணர் ஜம்பொறியில் திருவாளர்கள் N. சிவபாதசுந்தரம், K. பிரபாகச்சந்திரன், V. பாலகுமார், V. கார்த்திகேயன், P சாட்சாதீஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

1965 யாழ் மாவட்ட சாரணர் பொன்விழாவில் பங்கு கொண்டது 50 வது ஆண்டு நிறைவு.

1967 அமெரிக்காவில் நிகழ்ந்த 12 வது உலக சாரணிய ஜம்பொறியல் சாரணர்கள் T. இராசேஸ்வரன் M. சிவராசா, S. செந்தூர்ச்செல்வன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

1968 சாம்ராஜ்ய பிரதம சாரண ஆணையாளர் சேர் சாள்ஸ் மக்னீஸ் எமது கல்லூரிக்கு வருகை தந்தார்.

1970 "கண்டி அரசன் நாடகம்" தேவவன் யாழ்ப்பாணத்தின் நெறிப்படுத்துகையின் ஊடாக மேடையேற்றப்பட்டது. அமரர் மகாதேவன் அவர்களின் சேவையை நினைவு கூர்கின்றோம். அனுராதபுரத்திற்கு பத்து சாரணர்கள் துவிச்சக்கரவண்டியில் பயணஞ் செய்தனர்,

1972 காலியில் நிகழ்ந்த வெள்ளிவிழாவின்போது திரிசாரணர்கள் பங்கு கொண்டமை. கண்டியில் சாரணர் சங்கத்தின் வைரவிழாவின்போது எமது சாரணர்கள் பங்கு பற்றினர். அதிபர் அமரர் திரு. E. சபாலிங்கத்தின் சகாப்தம் உருவாகியது.

1973 பிரதம ஆணையாளர் திரு. C. M. P. வனிகதுங்க எமது குழுவிற்கு வருகை தந்தமை சிறப்புக்குரியது.

1974 பாரிதா பாதத்தில் நிகழ்ந்த 7 வது அகில இந்திய ஜம்பொறியில் திரு, த. தில்லைநாதன், செல்வன் விவேகானந்தன் ஆகியோர் பங்கு பற்றினர்.

1975 அகில இலங்கை திரிசாரணர் சம்மேளனத்தின் 26 வது கூட்டத்திற்கு 6 திரிசாரணர்களும் 2 ஆசிரியர்களும் பங்கு கொண்டமை,

1976 வைரவிழாவும் விசேட மலர் வெளியீடும்.

1977 எமது சாரணர்கள் பெற்றோருடன் 3 விமானங்களில் கொழும்பு பயணமானார்கள். கொழும்பு இந்துக்கல்லூரிச் சாரணருடன் சிரமதானம் மேற்கொண்டனர். அன்றைய அதிபர் திரு. P. S. குமாரசாமி உப அக்கிராசனராக யாழ் மாவட்ட சாரணர் சங்கத்திற்கு பதவியேற்று 1984 வரை பதவிவகித்தார்.

1978 பூநகரி பல்லவராயன்கட்டில் பயிற்சிப்பாசறை. மரம் நாட்டுவிழா சாரண ஆசிரியர்களுக்கான உடற்பயிற்சி திரு. மா. புவனேந்திரன் சர்வதேச பயிற்சி 3 ம் தரம் திரு. நா. நல்லையா அகில இலங்கை ரீதியில் திரு. P. முருகவேள், திரு. ஏ. கைலாஷ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டு 8 வது அகில இந்திய ஜம்பொறியில் கலந்துகொண்டனர் ''எண்ணங்கள் மாறலாம்'' நாடகம் மேடையேற்றப்பட்டது. சாரணத் தலைவர் பி. ஸ்ரீஸ்கந்தராசா 27 வது தேசிய திரிசாரணர் ஜம்பொறியில் பங்கு கொண்டார்.

1979 இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் எமது குழு பற்றி 15 நிமிடம் ஒலிபரப்பப்பட்டது. திரு. நா. நல்லையா உதவி மாவட்ட ஆணையாளர் ஆனார். மரம் நாட்டு விழா. முல்லைத்தீவில் மணவாளன் முறிப்பு பகுதியில் பாசறை வாசம். திரு. மா. புவனேந்திரன் குருளை சங்க செயலாளர்.

1980 எமது குழுவின் 7 ஜனாதிபதி சாரணர் அகில இலங்கை துவிச்சக்கர வண்டிப் பிரயாணத்தை மேற்கொண்டனர். மரம்நாட்டுவிழா சாரணர்களது ஒரு தொடர் நிகழ்ச்சியாக வருடாவருடம் அமைந்தது. இரணைமடுவில் பாசறை வாசம். சாரணர் பிரிவில் சென் ஜோன்ஸ் அன்புலன்ஸ் முதலுதவிப் பிரிவு விசேட பிரிவாகத் தொழிற்பட்டது. 74 வது உயர் பயிற்சி IV [14 - 8 - 80—23 - 8 - 80] மிரிகமவில் நடைபெற்றது. பயிற்சி பெற்றவர் பி. ஸ்ரீஸ்கந்தராசா போதனாசிரியர் திரு. N. நல்லையா.

1981 ஸ்தாபகர் தினம் குழுக்களுக்கிடையிலான போட்டியில் பங்கு கொண்டோம். திருவாளர்கள் தவகோபால், T. கனகராசா, A. ஏகாம்பரநாதன் எமது குழுவினர் உதவி மாவட்ட ஆணையாளர்களானார்கள்: யாழ் மாவட்ட சாரணராளர் சங்க செயலாளர் ஆக திரு. பி. ஸ்ரீஸ்கந்தராசா செயற்பட்டார்:

1982 கல்லூரி சாரணர் காரியக் குழு கூடி புதிய தெரிவுகள் இடம்பெற்றன: தலைவர் R. நடராசா, செயலர் திரு. வே. ஜோசப், பொருளர் திரு. சி. முத்துக்குமாரசாமி.

3 வது தேசிய சாரணர் ஜம்பொறிக்கு எமது குழுவின் 32 சாரணர்கள் அனுராதபுரத்திற்குச் சென்றதும், சாரணர் மலர் வெளியீடு செய்ததும் குறிப்பிடத்தக்கது. இதில் எமது சாரணர்களான K. செந்தில்குமார், இ. ராகவன், B. ரவிக்குமார் முறையே யப்பானுக்கும் அவுஸ்திரேலியா வுக்கும் இந்தியாவிற்கும் ஜம்பொறிகளிற்குச் சென்றனர்.

அனுராதபுரத்தில் யாழ் மாவட்ட ஆணையாளர் திரு: க. சச்சிதானந்தம் அகால மரணமடைந்தபோது அனுதாபத்திற்சாக இடைநிறுத்தி அஞ்சலி செலுத்தி வந்தோம். இவ்வாண்டில் புதிய துன்பமான அம்சமாகும் சாரணர் தேசிய வார அனுஷ்டிப்பு.

1984 தேசிய சாரணர் வாரம் சாரணிய தலைமைக் காரியாலயத்தின் அறிவித்தற்படி 1983 ம் ஆண்டிலிருந்து அனுஷ்டிக்கப்பட்டு வரப்படுகின்றது தாயார் தினம், வன பாதுகாப்புத் தினம், நட்புத்தினம், அயலவருக்கு உதவும் தினம், சமய அனுட்டானத்தினம், கணக்கெடுக்கும் தினம் ஒன்றுசேரும் தினம் ஆகியவற்றை உள்ளடக்கிய 7 நாள் விதிப்படி 1984 ஆண்டிலிருந்து அனுஷடிக்கப்பட்டு வரப்படுகிறது.

1985 சாரணர் குழுத் தலைவர் ஒழுக்கக் கட்டுப்பாட்டுச் சபையின் பிரதான அங்கத்தவராயிருத்தல். நாட்டுச் சூழ்நிலை காரணமாக மாவட்டப் போட்டியில் 5 நிகழ்வுகளில் மட்டும் பங்கு கொண்டமை.

1986 உழவுயந்திரத்தில் யாழ்ப்பாண மாவட்டப் போட்டிக்குச் செல்கின்ற நிலைமை இருந்தது. 70 வது ஆண்டு நிறைவு விழா மலரினையும் வெளியீடு செய்தோம்.

1987 வாழ்க்கைக்கு வளமான மகிழ்ச்சிகரமான இல்லச் சின்னத்தை Happy Home Badges] எமது சாரணர் பெறத் தொடங்கினர்.

1987 03-08-87 ல் முன்னாள் அதிபர் திரு. E. சபாலிங்கம் அமரரானபோது நினைவு அஞ்சலி செலுத்தினோம்.

1988 24-4-88 அன்று குருநாளையாக, சாரணியராக, சாரண சங்கத் தலைவராக இருந்த அதிபர் P. S. குமாரசாமி அவர்கள் மாரடைப்பால் மரணமானபோது சாரண அணிவகுப்பு மரியாதை மயானம் வரை சென்று செலுத்தியதுடன் கண்ணீர் அஞ்சலியும் வெளியிடப்பட்டது.

1989 பிரதம சாரண ஆசிரியர் கே. வி. மயில்வாகனம் அவர்கள் இவ்வாண்டில் அமரரானபோது நினைவு கூர்ந்தோம்.

1990 யாழ் மாவட்ட சாரண ஆணையாளர் அமரர் செல்லையா வரதலிங்கம் [12-5-90] அன்று அகால மரணமடைந்தபோது சாரணர் குழு அவரது இல்லமான வேலணைக்குச் சென்று அணிவகுப்பு மரியாதை செய்து [துண்டுப் பிரசுரத்துடன்] கௌரவித்தோம். 1980

ஆண்டிலிருந்து 1992 ம் ஆண்டுவரை பயிற்சி உதவி மாவட்ட ஆணையாளர் திரு. நா. நல்லையா அவர்கள் 4 வது யாழ்ப்பாணத்திற்கு வேண்டியபோது தேவையான ஆலோசனைகளை வழங்கிவரும் ஆலோசகராக இருந்து வந்தார். அவர்களுக்கு கல்லூரி சார்பாக சாரணர் குழு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

25-10-91 அன்று நல்லை ஆதீன முதல்வரின் வாழ்த்துச் செய்தியை அனுப்பியிருந்தார்.

திரு. மா. புவனேந்திரன் முன்னாள் குருளைத் தலைவரும், சாரணர் குழுத் தலைவருமாகவிருந்தவர் கிளிநொச்சி மாவட்டத்தில் சாரணியத்தை ஊடுருவச் செய்து அகில இலங்கையில் முதலிடத்தை தன் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள குழுவைப் பெறச் செய்ததுடன், சாரணியம் சார்பாக ஜப்பானுக்கும் வந்து தொடர்ந்து சாதனைகளை நிலை நாட்டி வருகின்றார்.

எமது துருப்பின் ஒரு பிரிவாக கடற் சாரணியம் ஆரம்பிக்கப்பட்டது. திரிசாரணர், குருளைச்சாரணர் என்பனவும் புனரமைக்கப்பட்டது.

1991 யாழ் மாவட்ட சாரணர் சங்கத்தின் செயலராக எமது கு. சா. த. பி. ஸ்ரீஸ்கந்தராசா தொழிற்பட்டார். மாவட்ட ஆணையாளரான அமரர் ஆ. சுப்பிரமணியம் அவர்களை பிரதம விருந்தினராகக் கொண்டு நடைபெற்ற பேடன் பவல் தினத்தில் "கலை இளவல்" எனும் கௌரவப் பட்டம் எமது துருப்புத் தலைவர் கோ. சத்தியனுக்கு அதிபர் K. S. குகதாசனால் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது. 75 வது ஆண்டினை முன்னிட்டு மாவட்டத்தினால் யாழ் பொறி நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது. 75 வது ஆண்டின் மாவட்டத்தின் ஆரம்ப நிகழ்வாக யாழ் கச்சேரி சாரணர் சிலை கௌரவிக்கப்பட்டு அடையாள ஊர்வலமாக இரு பிரிவாக யாழ் மத்திய கல்லூரியை வந்தடைந்து கூட்டத்துடன் முடிவடைந்தது.

75 வது ஆண்டு ஆரம்ப நிகழ்வாக எமது கல்லூரியினால் கொடிதினம் ஒன்று நிகழ்த்தப்பட்டது. 3 வது தவணையை எமது அதிபர் அ. பஞ்சலிங்கம் சாரணர் தவணையாகப் பிரகடனஞ் செய்தமை குறிப்பிடத்தக்கது

கொடிதினத்தின் முதல் இதழை மில்க்வைற் உரிமையாளர் கலாநிதி க. கனகராசா பெற்றுக் கௌரவித்தார்.

1992 எமது சாரணர் குழுவின் முன்னைய துருப்புத் தலைவர் T. கனக ராஜாவை பிரதம விருந்தினராகக் கொண்டு துருப்புத் தலைவர் செல்வன் மு. ஜோதீஸ்வரன் தலைமையில் பேடன் பவல் தினம் கொண்டாடப்பட்டது.

காங்கேசன்துறை மாவட்ட 10 வது ஆண்டு விழாவான சிம் ஜம்பொறியிற்கு யாழ் மாவட்டத்தில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர். இதற்கு துருப்புத் தலைவராக செல்வன் கோ. சத்தியனும் செயலராக சி. செவ்வேளும், பொருளராக ப சாய்மருகனும், பண்டகசாலைப் பொறுப்பாளராக மு. ஜோதீஸ்வரனும் எமது துருப்பிலிருந்து தெரிவு செய்யப்பட்டமை பெருமைக்குரியது. இவ் ஜம்போறியில் செல்வன் க. திருக்குமார் விசேட விருது பெற்றார் சாதனைச் சாரணனாகச் செல்வன் வை. ரமணானந்த சர்மா தெரிவானார்.

இலங்கை சாரணர் சங்கத்தின் 80 வது ஆண்டில் 4 வது தேசிய ஜம்பொறி குருநாகலில் நடைபெற்றது. இதில் எமது துருப்பிலிருந்து மு. ஜோதீஸ்வரன், ந. கௌரிதாசன், ஜெ. அச்சுதன், சி. ஸ்ரீகரன், கு. பார்த்தீபன், தி. பெக்ஸ்மன். சி. சுங்கா, துசியந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். ஜம்பொறிக்குச் சென்ற யாழ் மாவட்ட குழுவிற்கு எமது துருப்புத் தலைவர் செல்வன் ஜோதீஸ்வரன் துருப்புத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது:

மாவட்ட ஆணையாளர் திரு. ஆ. சுப்பிரமணியம் அமரரானார், நாம் வருந்துகின்றோம் எனும் அஞ்சலியை வெளியீடு செய்தும் உரிய சாரணிய கௌரவங்கள் கொடுத்தோம் யாழ் இந்துவின் முன்னாள் அதிபர் திரு. என். சபாரத்தினம் இறையடி எய்தியபோது சாரணர் அவருக்கு செய்யவேண்டிய மரியாதையை இந்துவின் ஏனைய சேவைக் கழகங்களுக்குத் தலைமை வகித்து செயற்பட்டனர்.

1992 திரு. R. ராஜ்குமார், திரு. S. தெவரஞ்சன் ஆகியோர் உ. மா. ஆணையாளர்களாக முறையே நிர்வாகம், குருளையருக்குத் தெரிவாகினர். 7 - 2 - 92 ல் திரு: ந. மகேந்திரன் யாழ் மாவட்ட ஆணையாளராக நியமிக்கப்பட்டார்.

# எமது வேர்கள்

# 1916 – 1992

## எமது அதிபர்கள்

1916 - 22 திரு. நெவில்ஸ் செல்லத்துரை
1923 - 35 திரு. M. சபாரத்தினசிங்கம்
1936 - 55 திரு. A. குமாரசாமி
1956 - 57 திரு. M. காசிப்பிள்ளை
1962 - 63 திரு. C. சபாரத்தினம்
1964 - 71 திரு. N. சபாரத்தினம்
1972 - 74 திரு. E. சபாலிங்கம்
1975 - 83 திரு. P. S. குமாரசாமி
1984 - 89 திரு. S. பொன்னம்பலம்
1990 - 91 திரு K. S. குகதாசன்
1991 - திரு. A. பஞ்சலிங்கம்

## எமது குழுச் சாரண ஆசிரியர்கள்

1916 - 17 திரு. V. கதிர்காமநாதன்
1918 - 19 திரு. M. சபாரத்தின சிங்கம்
1920 - 22 திரு. S. P. இராசையா
1923 - 57 திரு. K. V. மயில்வாகனம்
1958 - 68 திரு. T. சிவராசா
1969 - 78 திரு. N. நல்லையா
1979 - திரு. மா. புவனேந்திரன்
1980 - 92 திரு. பொ. சிறிஸ்கந்தராஜா

## உதவிச் சாரண ஆசிரியர்கள்

1916 - திரு K. கந்தையா
1918 - திரு S. V. சோமசேகரம்
1923 - திரு S. நாகலிங்கம் [குருளையர்]
1936 - திரு V. சுந்தரராசா
1942 - திரு S. ஜெயவீரசிங்கம்
1949 - திரு L. பெர்னாண்டோ
திரு S. தியாகராசா
திரு M. மகாதேவன்
1956 - திரு P. S. குமாரசாமி
1957 - திரு T. சேனாதிராசா
திரு T. சிவராஜா
திரு S. முத்துக்குமரன்
திரு N. சிவசுப்பிரமணியம்
திரு S. முத்துக்குமாரன்
திரு V. சிவசுப்பிரமணியம்
1960 செல்வி V. சண்முகம் [குருளையர்]
திருமதி P. சிவலிங்கம்
திரு T. சற்குணராஜா
திரு S. சிவனேஸ்வரராசா [குருளையர்]
1965 திரு S. முத்துக்குமாரன்
1967 திரு V. S. சுப்பிரமணியம்
1968 திரு N. நல்லையா
1970 திரு V. துரைராஜா
திரு V. சுந்தரராசா [குருளையர்]
1971 திரு S. ஆறுமுகம் [குருளையர்]
திரு K. குமாரசிவம்
1972 திரு M. ஆறுமுகம்
திரு R. அருளானந்தம்
1975 திரு மா. புவனேந்திரன்
திரு T. விசாகராஜா
1978 திரு P. சிறிஸ்கந்தராசா
1979 திரு S. P. வில்வராஜா
திரு T. இலங்கேஸ்வரன்
1980 திரு S. P. மோகனச்சந்திரன்
1987 திரு K. விக்னேஸ்வரன்
1988 திரு K. தங்கவேல்
1990 திரு A. அரவிந்தன்
1990 திரு P. முத்துக்குமாரன்

## எமது துருப்புத் தலைவர்கள்

1916
1918 செல்வன் R. இராகவநாதன்
1923 ,, S. ஆறுமுகம்
1936 ,, T. கனகராசா
1942 ,, S. சீனிவாசன்
1949 , V. பாலசுந்தரம்
1956 ,, T. சண்முகநாதன்
1957 ,, T. நடராசா
1959 ,, N. கமலநாதன்
1960 ,, S. இராசசுந்தரம்
1963 ,, U, கார்த்திகேயன்
1964 ,, S. சந்திரகாந்தன்
1965 ,, S. அரியரத்தின்
1966 ,, T. இராஜேஸ்வரன்
1967 ,, M. தாமோதரன்
1968 ,, K. சிவாகி
1969 ,, K. புவிராசசிங்கம்
1970 ,, P. தில்லைநாதன்
S. ஹரிகரன்
1971 ,, N. முருகானந்தன்
,, S. அமரநாத்
1972 செல்வன் T. முகுந்தன்
,, A. பிரதாபன்
1973 ,, S. ஜெயபிரதாபன்
,, M. பத்மயோகன்
1974 ,, M. பரமானந்தன்
,, S விஜயசிறி
1975 ,, S. உதயாகரன்
,, K. ஹரிச்சந்திரரா
,, R. இளசோதிடன்
1976 " S. சிதம்பரநாதன்
,, பொ. பாலேந்திரா
" M. நகுலேஸ்வரன்
1977 " T. புகமோதிரன்
1978 " K. கலாரவி
1979 " S. கௌரிபாலன்
1980 " K. பத்மலிங்கம்
1981 " K. பத்மநாதன்
1982 " K. குணநாதன்
1983 " S. சற்குணேஸ்வரன்
1984 " K. குமாரதாசன்
1985 ,, K. விஜயசுரேஸ்
1987 ,, R. ராகவன்
1988 ,, S. கணேசன்
1990 " S. சற்குணராசா
1991 ,, K. சத்தியன்
1992 ,, M. ஜோதீஸ்வரன்

# Our Queen Scout's and Paesident Scout's

## QUEEN SCOUT'S

### 1964 — 1967

S. Janagan
V. Gopalsangarapillai
V. Kartnigeyan
S. Sathianandan
S. Sathiavan
V. Balakumar
K. Sivarajasooriyar
S. Ariarathnam
K. Prabachandran
P. Sathatheeswaran
T. Rajeswaran
S Mahendrarajah
L. T. Pathmanapan
R. Ratharajah
D Yogeswaran
S. Nadarajalingam
M. Sivasithambarasan
A. Gnaneswaran
N. Vivekanandan
V. Satkuna rajah
A Kandasamy
N, Jeyaseelan
K. Balasubramaniam

### 1969

M. Thamotharan
S. Hariharan
S. Amaranath
T. K. Yoganathan
R. Manoharan
T. Chadacharam

### 970

K. Puvirajasingam
P. Thillainathan

### 1971

L. Pathmayogan
N. Paramananthan

## PRESIDENT SCOUT'S

**1972**

K. Harchandrai
S. Wijayasri

**1973**

S. Sithamparanthan

**1974**

T. Puvanenthiran
S. Balamaheswaran

**1975 — 1976**

M. Naguleswaran
S. Uthayanan
V. Skandarajah
R. Rajendran
N. Ketheeswaran
S. Sritharan
S. Gnana sampanthan
K. Jegatheeswaran
K. Kumarathasan

**1977**

S. Aravinthan
P. Balendran
K. Kalaravi
K. Yogeswaran

**1978**

S Gowribalan
S Thevaranjan
S. Vasanthan
S. Satheeswaran
J. Kailash
P. Murugavel
T. Tharmapalan
P. Indrasri
P. Muthusamy

**1980**

R. Sugantharaj
B. Nimalan

**1981**

C. Archuna
A. Arulathanan
K. Kirubaharan
J. Tharmaseelan
S. Sivaganesh

**1985—1986**

K. Vijayasuresh
T. Dominic Ravindraj
R. Ragavan

**1987—1988**

P. Ganeshan
I. Chandrakumar


**1989—1990**

S. Satkunarajah

**1991—1992**

K. Sathiyan
V. Ramananthasarma
K. Sathees
P. Senthilkumaran
S. Chevvel
V. Mayooran
M. Jotheeswaran
P. Saimaruhan

# President Scouts - 1992




Mas. K. Sathiyan



Mas. V. Ramannathasarma



Mas. S. Chevvel



Mas. M. Jotheeswaran



Mas. P. Saimaruhan

★

Mas. K. Sathees


★

Mas. P, Senthilkumaran


★

Mas. V. Mayooran


## *ALL ROUND SCOUT CORD WINNERS — 1992*



Mas. S. T. Luxmanan




Mas. B. Shanmugabalan



Mas. T. Myuran

## *OUR ROVER CREW — 1991*



# மனதை உறுதி செய்யும் சாரணியம்

ஒருவனது உள்ளம் மிக்க உறுதி உள்ளதாக இருக்க வேண்டும். அது ஒரு பூரண மனிதனுக்கு இருக்க வேண்டிய சிறப்பம்சங்களில் தலையானது ஆகும்.

இதையே பாரதியும் "வைரமுடைய நெஞ்சு வேண்டும்," "மனதில் உறுதி வேண்டும்" என அறைந்து கூறிவிட்டு சென்றுள்ளான்.

இவ்வாறான உறுதியான, தன்னம்பிக்கையுள்ள மனிதனை உருவாக்கித் தருவதுதான் சாரணியம். சாரணனின் மகுடவாக்கியம் ஆகிய "எதற்கும் தயாராயிரு" என்பதும் இதைத்தான் உணர்த்தி நிற்கின்றது. மனதில் உறுதி கொண்டவன் தான் எதற்கும் தயாரானவன் சாரணியம் ஆனது சிறு பராயத்தில் இருந்தே மனிதன் பல்வேறு வகையான பயிற்சிகள் மூலம் ஒப்பற்ற மனவலிமை கொண்டவனாகவும் நாட்டின் சிறந்த நற்பிரஜை யாகவும் வளர்த்து எடுக்கின்றது.

சாரணன் உள்ளத்தில் மட்டும் உறுதி கொண்டவன் அல்ல. அவனுக்குத் தரப்படும் கடுமையான பயிற்சிகள் மூலம் அவனது உடலும் உரமேறுகிறது. சாரணியம் அவனது சாரணிய வாழ்க்கையிலே பல தலைமைத்துவ பயிற்சிகள் அளிக்கின்றது. இன்றைய சிறுவர்களே நாளைய சமுதாயத்தைக் கட்டி எழுப்பும் தலைவர்கள் ஆகையால் சிறந்த உறுதி தளராத தலைவர்கள் சாரணியம் பெற்று தருகின்றது

மன உறுதி கொண்டவன் எதனையுமே சாதித்து விடலாம். இதை வள்ளுவரின் குறள் ஒன்றின் மூலம் நன்கு அறியலாம்

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார் திண்ணியராகப் பெறின்"

தாம் நினைத்த காரியத்தில் உறுதி கொண்டவர், தாம் நினைத்த காரியத்தை நினைத்தபடியே அடைவார்கள்.

எல்லோரும் பெரிய காரியங்கள் செய்ய வேண்டும் என்றுதான் ஆசைப்படுவார்கள். பெரும்பாலோரைப் பொறுத்தவரையில் இந்த எண்ணம் வெறும் எண்ணமாகவே இருந்து விடுகிறது.

எண்ணம் செயலாக வேண்டுமானால் எண்ணத்தில் அழுத்தம் வேண்டும். அதாவது எண்ணம் உறுதியாக இருக்க வேண்டும். எண்ணம் உறுதிப்படும்போது தான் அது செயலுக்குத் தூண்டுகிறது. செயல், சாதனைக்கு அடித்தளமாக அமைகிறது.

ஒருவன் எண்ணத்தில் திண்மை உடையவன் ஆகில் அவன் எதையும் திறமையாக செய்ய முடிகிறது. இத்தகைய திண்மையான மனப்பாங்கு உள்ள எதிர்கால சமுகத்தைதான் சாரணியமும் பயிற்சிகளும் வளர்த்தெடுக்கின்றன.

அடுத்ததாக வலிமையான மன உறுதி கொண்டவர்கள் எத்தகைய இடர்வரினும் அஞ்ச மாட்டார்கள். இதனையும் ஒரு குறளின் மூலம் நன்கு விளங்கலாம்:
'பரியது கூர்ங் கோட்டது; ஆயினும் யானை வெரூஉம் புலி தாக்குறின்.''

யானை ஆனது பெரிய உருவம் உடையது; கூர்மையான கொம்புகள் கொண்டது. ஆயினும் புலி யானையைத் தாக்கினால் யானை அஞ்சும்.

யானை மிகுந்த பலம் உடையது; கூர்மையும், வலிமையும் பொருந்திய தந்தங்களை உடையது. ஆயினும்; சிறிய உருவமுடைய புலி அதைத் தாக்க வரும் போது யானை பயப்படுகின்றது காரணம் என்ன?

யானை உருவத்தில் பெரியது. ஆயினும் மனதில் வலிமை இல்லாதுபோகும் போது மனவலிமை கொண்ட சிறிய புலி அதை தாக்கத் துணிந்து விட்டால் யானை அச்சப்படுகிறது. மனதில் வலிமை இல்லாதபோது பலங்கூட பயன் அற்று போகிறது.

ஆகையால் ஒருவனுடைய பலம் அவனுக்கு பயன்பட வேண்டுமாயின் அவனுடைய உள்ளம் வலிமை கொண்டதாக இருக்க வேண்டும். வேறுபலம் இல்லாதவன்கூட பலசாலிகளை வென்றுவிட முடியும்.

மேற்காட்டிய விளக்கத்தின் மூலம் உள்ளத்து உறுதியின் சிறப்பு தெரிந்திருக்கும். எனவே இத்தகைய தன்நம்பிக்கையும், மனவலிமையும் கொண்ட மனிதனை உருவாக்கும் சாரணியத்தில் ஒவ்வொரு மாணவனும் இணைந்து தானும் உயர்வடைந்து தன் பொன்நாட்டையும் உயர்விக்க வேண்டும்.

நம் நாட்டுச் சூழ்நிலையில் வளர்ந்து வரும் சிறார்களுக்கு தற்துணிவுக்கான பயிற்சி அவசியம் என நான் கூறி அறியவேண்டியதில்லை. இக் கால கட்டத்தில் சாரணிய பயிற்சி கல்வி கற்றலுக்கும் வாழ்தலுக்கும் இன்றியமையாததாகவும் வழிகாட்டியாகவும் அமைகிறது.

வாழ்க சாரணியம்! வளர்க அதன் தொண்டு!

ஜெ. அச்சுதன்

சேவை செய்வோம்

# OUR 4th NATIONAL JAMBOREE'S 1992



4 வது தேசிய ஜம்பொறி 1992ம் ஆண்டு ஆவணி மாதம் 15 தொடக்கம் 21 வரை குருநாகல வெலகல ஸ்ரேடியத்தில் நடைபெற்றது. இதில் எட்டுப்பேர் எமது துருப்பில் இருந்து கலந்து கொண்டனர். எமது துருப்பில் இருந்து ஆகக் கூடுதலான சாரணர் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. எமது யாழ் மாவட்ட குழுவுக்கு எமது துருப்புத் தலைவர் செல்வன் மு. ஜோதீஸ்வரன் துருப்புத் தலைவராக தெரிவு செய்யப்பட்டது பெருமைக்குரியது. இதன் குழுத் தலைவராக திரு. இ. ராஜ்குமார் தெரிவு செய்யப்பட்டார். இவர் எமது பழைய சாரணர் ஆவார்.

"அன்னியனை வரவேற்று சகோதரனாய் வழியனுப்புதல்"
— 4 வது தேசிய ஜம்பொறி —

**75 வது ஆண்டு விழாவைக் கொண்டாடும்**

**யாழ் இந்துக் கல்லூரி சாரணர் இயக்கம்**

**மேலோங்கி வளர எமது நல் வாழ்த்துக்கள்**

# நந்தினி களஞ்சியம்

*303*, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

தமிழ் ஈழத்தில் வெளியாகும்
ஒரு தினத்தாள் கலண்டர்

அஷ்டலக்ஷ்மி தினத்தாள்
கலண்டர்

★

வெளியிடுவோர்

**சிவா பிரின்டேர்ஸ்**
த. பெ. இல. 1.
கைதடி

அன்பளிப்பு

**கிறீன்**
**சியர்ஸ் ரெயிலறிங்**
இல. 11, மின்சார நிலைய வீதி,
பெரியகடை,
யாழ்ப்பாணம்.

யாழ் இந்துக்கல்லூரி
சாரணியத்தின் 75-ம் ஆண்டு விழா
சிறப்புறவும், சாரணியம்
சிறந்து வளரவும்
எமது வாழ்த்துக்கள்!

**கோபி சாரண**
**சென் ஜோன்ஸ் அங்காடி**
74, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.

சிறந்த வேலைப்பாடுள்ள தங்க வைர
நகைகளை விரும்பிய டிசைன்களில்
தெரிவு செய்யலாம்.
ஓடர்கள் குறித்த தவணையில்
சிறந்த முறையில் செய்து
கொடுக்கப்படும்.

●

**செல்லையா**
**சிவபாதலிங்கம்**
வைரக்கல் நகை வியாபாரம்
191H, 218H, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# சமூகம் மேம்பட

## சாரண ஆசிரியர் ஒருவர்.....

மூன்றாம் மண்டல நாடுகளில் மாணவர்களுக்கு ஆளுமையை வளர்க்கும் பாடசாலை பிறவிதான அமைப்புகளில் பல்வேறு அம்சங்களைக் கொண்ட சாரணிய அமைப்பு முதலிடம் வகிக்கின்றது எனலாம். சிறப்பு ஆற்றல்களைக் கொண்டவர்களையும் பின்தங்கியிருப்போரையும், உரிய காலத்தில் செயற்பாடுகளில் ஈடுபட வைக்கின்ற இயல்பினைக் கொண்டதும், மாணவர்களது ஒவ்வொரு பருவத்திலும் அவர்களை நட்சத்திரமாக திகழ வைப்பது சாரணிய அமைப்பாகும்.

இவ்வாறன அமைப்பு பயிற்சி, செயற்றிறமை, அவதானம் போன்ற நடவடிக்கைகளால் மாணவர்களில் நடத்தை மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. இதனையும் ஒருவகை அனுபவக் கற்றல் எனலாம். அனுபவமே வாழ்க்கைக்கு துணைச் சாதனம், இவ்வாறன அனுபவக் கற்பித்தல் நடவடிக்கைக்கு நமது நாட்டில் பொறுப்பாசிரியர்களாக, வழிகாட்டியாக தொழிற்பட ஆசியர்கள் விருப்பம் தெரிவிப்பது குறைவாக இருப்பதுடன், பொறுப்புக்களை ஏற்பவர்களும் முழுமையாக செயற்படுவதும் அருமையாகவே உள்ளது. கற்பித்தலில் காட்டும் ஆர்வம் இவ்வகைப் பொறுப்புக்களை ஏற்கும் ஆசிரியர்கள் செய்யத் தவறுமிடத்து சாரணியம் போன்ற பல்வேறு அமைப்புகளில் இணைந்து தம்மை வளப்படுத்த முனையும் மாணவர்கள் குறிப்பிட்ட இலக்கை அடையத்தவறி இவ்வகை அமைப்புக்களே அவர்களை சீர்கேடு அடைய வழிவகுத்தும் விடுகின்றன. இதற்கு என்ன காரணம்?

இதற்குப் பொறுப்பாக இருக்கின்ற ஆசிரியர்கள் சர்வாதிகாரமாகவோ, அல்லது பெயருக்காக ஆசிரியராக மட்டும் இருந்து குறிப்பிட்ட குழு மாணவர்களின் நடவடிக்கைகளில் தலையிடாக் கொள்கையைப் பின்பற்றுவதேயாகும்.

முதலில் விடயம் பற்றி விளக்கமளித்து, குழுக்களைத் தாமகவே இயங்க விட்டு, ஆளுமைகளை வளர்ப்பதும், இரகசியமாக அவர்களது நடவடிக்கைகளை கண்காணிப்பதும், சிறப்பாகச் செற்படும்போது பாராட்டுவதும், தவறுதுடத்து, கோபம் ஏற்பட்டாலும் அதனைக் கட்டுப்படுத்தி பொறுமை என்னும் நகை பணிந்து அன்பான சுபாவத்துடன் குறிப்பிட்ட இந்த நடவடிக்கையை நீங்கள் மேற்கொள்வதன் மூலம் ஏற்படும் நல்ல தீய விளைவுகளை எடுத்துக் கூறாமல் குழுக்களுடன் தாமும் ஒருவராக ஒளிறியிருப்பதன் மூலம் உணரவைக்க வேண்டும். ஜனநாயக சூழ்நிலையை குழுவில் நீரோட்டமாக நிகழ வைக்க வேண்டும் அன்பு. பிறரை மதித்தல் விட்டுக்கொடுக்கும் மனப்பாண்மை, பிறருக்கு உதவுதல் சேவை செய்தல் போன்ற மனப்பாங்கை வளர்ப்பதே ஆசிரியருடைய குறிக்கோளாக இருத்தல் வேண்டும்.

அதிபர்கள், பிறவிதான பொறுப்பாசிரியர்கள் முறையே தூண்டல் காரணியாகவும் மேம்பாடுடைய துன்பம் தராத செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் சமுதாயத்தில் வாழப்போகும் மனிதர்களை அவர்கள் மாணவர்களாக இருக்கும் போதே தாமும் இதமாக வாழ்ந்து, வாழும் உறவினர், உற்றார் சக தொழிலாளர் அலுவலகர்களுடன் அன்பாக, பண்பாக நேயத்துடன் வாழ்வதற்கு பழக்கப்படுத்தலே நோக்கமாகவிருத்தல். இந்தவகையில் சராண ஆசிரியர்கள் நற்பிரஜைகளை உருவாக்கும் நன்நெறியாளராக செயற்பட்டு வந்ததுபோல் நூறாண்டுவரை இவ் மனப்பாங்கை தொடர்வோமாக.

**க. விக்கினேஸ்வரன்**
சாரணத் தலைவர்

## ஏன் இந்தச் சாரணியம்?

எமது இந்தச் சாரணிய இயக்கம் 1907 ஆம் ஆண்டு பிறவுண்சீஸ் தீவில் இருபது சாரணர்களுடன் ஆரம்பமானது. 1907 ஆம் ஆண்டில் முதலாவது சாரணிய பாசறை நடைபெற்றது. இவ்வாறு வளர்ச்சி நடைபோட்ட சாரணியம் 1916 இல் யாழ்ப்பாணத்தில் நிலையான இடத்தைப்பெற்றது. இச் சாரணிய இயக்கம் சமுதாயத்திற்கு மகத்தான சேவையை ஆற்றி வருகிறது. ஏன் இந்தச் சாரணியம் என்ற வினாவுக்கு விடைகாணுமுன் எமது சாரணியத் தந்தை பேடன் பவல் பிரபு பற்றி கூறுவது மிகவும் பொருத்தமுடையது. சாரணியத்தை ஆரம்பித்தவர் இந்த பேடன் பவல் பிரபுவே இவருடைய இந்தசேவையால் இன்று இச் சாரணியம் நூற்றுப்பதினெட்டு நாடுகளில் நூற்றி எண்பத்தைந்து இலட்சத்திற்கு மேலான சாரணர்களைக் கொண்டு வளர்ச்சியடைந்துள்ளது. இச் சாரணிய இயக்கம் சர்வதேச இயக்கமாக மாற்றியமைக்க மூலகர்த்தா இந்தப்பேடன் பவல் பிரபுவே. இவருடைய ஊக்கத்தாலும் விடாமுயற்சியாலும் சாரணிய இயக்கம் பல கட்டங்களைத் தாண்டி வீறுநடை போடுகின்றது. ஓர் ஆலம் விதை மிகவும் சிறியது ஆனால் அது வளர்ந்து பெரும் விருட்சமாக காட்சி தருவதோடு நிழலையும் கொடுத்து உதவுகிறது. இதேபோலவே இந்தச் சாரணியமும் இருபது சாாணர்களுடன் ஆரம்பித்து இன்று நூற்றி எண்பத்தைந்து இலட்சத்திற்கு மேலான சாரணர்களைக் கொண்டு வளர்ச்சியடைவதோடு சமுதாயத்திற்கும் உதவிகளைச் செய்து வருகின்றது.

ஓர் சமுதாயம் ஒழுக்கமுடையதாகவும், பண்புடையதாகவும் மாறவேண்டும் என்ற இலட்சியத்தைக்கொண்டதே இச் சாரணியம். இது ஒவ்வொருவர்களையும் நல்வழிப்படுக்தல் வேண்டும் என்ற கொள்கையுடையது. இவ்வாறு எந்த ஒரு நிறுவனமும் இந்தப்பண்புகளை வளர்க்க முன்வரவில்லை. சாரணியமே இதனை செய்து வருகிறது. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்றையும் தாரக மந்திரமாகக் கொண்டு சமுதாயத்திற்கு உதவிகளைப் புரிகின்றது. வீதிப்பாது காப்பு, முதலுதவி என்ற வரிசையில் இவர்களது சேவை எண்ணிலடங்காதவை. இந்தச் சாரணியத்திடம் பல்வேறு சேவைகள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. இது சமுதாய நலன் கருதிய சேவையாய் அமைந்திருக்கும். இதன்படி வீதிப்பாது காப்பு, முதலுதவி, நற்பண்பு உடையவர்களை ஆக்குதல் என்ற வகையால் அமையும்' சிறுவர்களை பாசறை மூலம் நமது தேவைகளைத் தாமே செய்து கொள்ள இச் சாரணியம் வழிகாட்டுகிறது. வருங்கால இளைஞர்களை நல்லதொரு பண்புடைய சமுதாயமாக வளர்த்து வருகின்றது இந்தச் சாரணியம்.

ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்ற வள்ளுவரின் குறளுக்கு அமைய இந்தச் சாரணியம் அமைகின்றது. சாரணியர்களிடையே ஒழுக்கம் மிகவும் அவசியம். ஒழுக்கத்தை நீங்கள் கற்பதுடன் வருங்கால சந்ததிக்குச் சொல்லிக் கொடுங்கள், இதன் மூலம் நாளைய சமுதாயம் பண்புடையவர்களாக மாறுகின்றது.

கட்டுப்பாடு, கடமையுணர்வு உள்ளவர்களாக செயற்பட பயிற்சிகளைப் பாசறை மூலம் பெற்றுக்கொடுக்கிறது சாரணியம். நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் பொறுப்புணர்ச்சி, பெரியோருக்குக் கீழ்ப்படிதல், ஒற்றுமையாக கூடி வாழ்தல் ஆகிய பண்புகளை வளர்த்துக்கொள்ளும். மேலும் ஆடல், பாடல் நடிப்பு, கைப்பணி போன்ற ஓய்வுநேர முயற்சியின் மூலம் நம் நாட்டு பண்பாடுகளும் பாரம்பரியங்களும் அழிந்து விடாமல் போகிறது. உண்மை, மதிப்பு, கீழ்ப்படிதல், தன்னம்பிக்கை, இரக்கம், அடக்கம், ஒத்துழைப்பு, மரியாதை போன்ற உயர்ந்த பண்பை, வளர்க்க சாரணியம் உதவுகிறது. தைரியசாலியாகவும் திடகாத்திர மாணவர்களாகவும் இருக்க சிறுவர் தொடக்கம் இளைஞர் வரை சாரணிய இயக்கம் பக்க துணையாக இருக்கிறது. பேடன் பவல் பிரிபு அவர்கள் அன்று சாரணியத்தை ஆரம்பித்து வைத்தபடியால் இன்று சாரணியம் சர்வதேச அரங்கில் நிலைபெற்றுள்ளது.

சாரணியம் பொலிவுடன் வளர்ச்சிப் பாதையிலே வீறுநடைபோடுவதற்குத் தன்னலமற்ற ஒன்றுபட்ட சேவையே அடிப்படைக் காரணமாகும், மிக நெருக்கமான ஒத்துழைப்பு பலம் மிக்க ஆர்வம், விசுவாசம் என்பவை எமது வளர்ச்சிக்கு காரணமாகும்.

கி. கோகுலன்
ஆண்டு 10

---

பயிற்சியின் மூலமே
ஒருவன்
அனுபவம் பெறுகின்றான்

---

# நன்மை நல்கும் சாரணியம்

## சிறுகதை

ராமு பள்ளிவிட்டு துள்ளி வந்தான் வீட்டுக்கு. புத்தகப் பையைத் தூக்கி யெறிந்தவன் நேராகச் சமயலறையை நோக்கிச் சென்றான். அப்போதுதான் மணி 12.20 ஆகியது. எப்போதுமே வேளைக்கு சமையல் முடிக்கும் அவனது தாய் ஏதோ இன்று பிந்திவிட்டது. பாடசாலை விட்டு வந்ததுமே சாப்பாடு என்று கத்துபவன் இன்று மட்டும் கொஞ்சலோடு தாயைக் கேட்டான்.

''அம்மா நான் சாரணியத்தில் சேரட்டுமா?'' ''அப்படி என்றால் என்ன' என்றாள் அம்மா. ''நல்லூர்த் திருவிழாவிலே தம்பி நீங்கள் இந்தப் பக்கத்தால்' போங்கள் அந்தப் பக்கத்தால் வருகின்றவர்கள் என்று அன்போடும் ஆதரவோ டும் சொன்னார். நிறையப் பச்சுகள் எல்லாம் குத்திக்கொண்டு ஒரு அண்ணா'' சரி, சரி அந்தஸ்கவுட் தானேஎன்றாள் அவனும் ''ஓம்'' என்கிற மாதிரி தலையசைத் தான். ''சரி, சரி அப்பா பின்னேரம் வருவார்; அவரிடம் முடிவைக் கேட்டுக் கொள்'' என்றவள் சாப்பாட்டோடு இவனிடம் தட்டை நீட்டினாள்.

மாலை 4.30 மணியளவில் அவனுடைய அப்பா சைக்கிளில் வீட்டுக்கு வந்தார். ராமுவின் அம்மா அளித்த தேனீரைப் பருகிக்கொண்டிருக்கும்போது அவனுடைய அம்மா ''உங்கள் மகன் ஸ்கவுட்டில் சேரப்போறானாம்'' என்றாள் ராமுவும் கேட்பதுபோல் தலையசைத்தான். அவனுடைய அப்பா ''உனக்குத் தெரியுந்தானே நல்லூர்த் திருவிழாவிலே எல்லோரும் வெய்யிலிலே கருவாடு ஆகிக்கொண்டிருக்கிறது கண்டனிதானே'' என்றார். ராமு மௌனத்துடன் தலை யசைத்தான். ''சரி, சரி உன்னுடைய விருப்பத்திற்கு இந்த வருடம் மாத்திரம் இரு'' என்றார் அப்பா.

அடுத்த நாள் மாலை சாரணர் ஒன்றுகூடலில் அவனும் சேர்ந்தான். தொடக்கத்தில் சிறிது கஷ்டமாய்த்தானிருந்தது. பின்னர் போகப்போகப் பழகி விட்டது. இப்படியே இரு மாதம் சென்றது. ராமுவும் சாரண நடவடிக்கை யாவிலும் பங்கேற்றான். ஒரு நாள் பத்திரிகையில் சாரணர்களின் உதவியினால் பிள்ளையார் கோவிற் கேணி திருத்தப்பட்டது. என்று தலைப்புச் செய்தி வந் தது. ராமுவின் அப்பா மிக்க மகிழ்ச்சியடைந்தார், எனினும் ராமுவிற்கு வருத் தம் வந்துவிடுமோ என்றும் பயந்தார்.

ஒருமுறை ராமு ஓர் ஜம்பொறியில் பங்கேற்றான். அப்போது அவன் புரிந்த சாகசத்திற்காக அவனுக்கு ஏவோட் [மெடல்] கிடைத்தது இதனாலும் மகிழ்ந்தார். அவனுடைய அப்பா ஒருமுறை ராமு ''பேடன் பவல் தந்தை'' என்ற புத்தகத்தை நூலகத்தில் இருந்து பெற்றான். ராமு அதைப் படித்து மகிழ்ந்தான். ஒரு முறை அவன் படிக்கும்போது பேடன்பவல் வாய்ப் பான ஒரு தருணத்திலே உளவறியும் வேலையில் ஈடுபட்டார். பிரித்தானிய ராணுவத்தின் உளவறியும் கிளை 1897 ஆம் வருடம் வரையும் அத்தனை முக்

# எமக்காக எமை விட்டு பிரிந்தவர்கள்


❋

**க. ஹிரிச்சந்திரா (ராதா)**

*[துருப்புத்தலைவர் — 1975, ஜனாதிபதிச் சாரணர்]*

❋





❋

**வை. ரமணானந்த சர்மா (மணிமாறன்)**

*[உதவி துருப்புத் தலைவர் — 1991, ஜனாதிபதிச் சாரணன்]*

❋

கியமான ஒரு கிளையாக இருக்கவில்லை, அதனுடைய தலைமைக் காரியாலயம் இலண்டனிலிருந்து அங்கிருந்தே உளவு விடயங்கள் வெளிநாட்டுப் பத்திரிகைகள் மூலம் பெறப்பட்டன. அதாவது வெளிநாட்டுப் பத்திரிகைகளிலே வரும் புதினங் களை வெட்டி மிகச் சாவதானமாக ஒட்டி வைத்திருந்தார்கள். ஆனால் அந் தச் செய்திகளைப் பிரிட்டனுடைய இக் காலம் தேவைகளையும் நடைமுறைக ளையும் அனுசரித்து எவரும் ஆராய்ச்சி செய்யவில்லை. இப்படியாக இந்த உள வறியும் முறையிலோர் அபிவிருத்தி நடந்துகொண்டுவந்தது. வெளிநாட்டுப் பத் திரிகைகளின் பிரசுரிக்கப்படாத பல விடயங்களை நேரே போய் அறிந்து கொண்டு வருவதற்காகச் சில தூதுவர்கள் அனுப்பப்பட்டார்கள். அவர்களுக்கு வேண்டிய பண உதவி செய்யப்பட்டது. ஆனால் பேடன் பவல் தம்முடைய செலவை அரசாங்கத்திடமிருந்து பெறவில்லை, தாம் பிரயாணஞ் செய்த இடங்க ளில் கண்டவற்றை எழுதியும் ஆங்காங்கே காணும் காட்சிகளைப் படமாகத் தீட்டி விற்பனை செய்தும் அவர் தமக்குத் தேவையான பணத்தைப் சேகரித் தும் கொண்டார்.

இதைப் பார்த்து ஆச்சரியப்பட்டான். ஏனெனில் இவர் நாட்டுக்குச் சேவை செய்தார். தன்மதிப்புள்ளவர், சாகசங்கள் புரிந்தார் என்பதும் தெரிய வந்தது இப்பந்தி மூலம் மேலும் இவர் உளவறியும்போது வன்முறையைக் கையாளவில்லை என்பதும் நடக்கும் திறனுடையவர் என்பதும் அவனுக்குத் தெரிய வந்தது.

ஒருமுறை ராமு தனது நண்பன் வீட்டிற்குச் சென்றான். அப்போது அவன் தனியே வீட்டிலிருந்து படம் பார்த்துக்கொண்டிருந்தான். ராமுவும் அவனு டன் சேர்ந்து படம் பார்த்தான். சிறிது நேரத்தில் படம் நின்று விட்டது. உடனே ராமுவின் நண்பனான ரகு வயரைப் பிடித்து ஆட்ட மின் ரகுவைத் தாக் கியது. சாரணியத்தில் முன் அனுபவம் உள்ள ராமு உடனே ஓடிச்சென்று பிர தான அளியின் மின்சுற்றை நிறுத்தினான். அப்போது ரகு மயங்கிய நிலையில் கீழே சாய்ந்தான் ஆனால் அவனுடைய கரத்திலிருந்து மின்வயர் நழுவவில்லை. இதனால் ரகுவை ராமு ஒரு காய்ந்த தடியால் தட்டி அப்புறப்படுத்தினான். அப்போதும் அவன் மயங்கிய நிலையில் கிடந்தான். பின்னர் ராமு சிறிது தண்ணீர் தெளித்து அவனுடைய மயக்கத்தை அகற்ற முயன்றான். அப்போது ரகுவின் பெற்றோர் வந்துவிட்டனர். நிலைமையை அறிந்தனர். உடனே வைத் தியர் அவனைச் சோதித்துவிட்டு, ராமு ரகுவைக் காப்பாற்ற ஒரு வினாடி பிந் தியிருந்தால் கூட உங்கள் மகனை நீங்கள் உயிருடன் கண்டிருக்கமாட்டீர்கள் என்றார். அப்போது ரகுவின் பெற்றோர்கள் ராமுவுக்கு என்னென்று நன்றி சொல்வது என்றே தெரியாமல் திகைத்தனர். இதனையறிந்த பத்திரிகை நிரு பர்கள் ராமுவை சுற்றி வளைத்துவிட்டார்கள்.

மறுநாள் காலைப் பத்திரிகையில் கட்டடத்துறை பொறியியலாளர் மகன் ரகுவை சாரண வீரன் ராமு மரணத்திலிருந்து காப்பாற்றினான் என்ற செய்தி தலைப்பாக ராமுவின் படத்தோடு போடப்பட்டிருந்தது ராமுவின் தந்தைக் குத் தலைகால் தெரியாமல் புழுகம். அவர் ராமுவை அணுகி அழைத்து "நீ இந்த வருடம் மட்டுமன்றி நின் வாழ்நாள் பூராகவும் சாரணியத்திலிருந்து சாகசம் புரி" என்றியம்பினார். ராமுவிற்கும் ஒரே புளுகம்.

# எம்மை வளர்த்து எம்மை விட்டுபிரிந்தோர்

## ஹரிச்சந்திரா

சேவைக் கென்றே சிலபேர் பிறப்பார்
அவரில் ஹரிச்சந் திரா ஒருவன்!
அவல் கொண்டே அறுபத் தொன்பதில்
அணி சாரணியம் தனில் சேர்ந்தான்
சேவை யான பயிற்சிகள் பெற்றார்
திகழ்ந்தார் சிறந்ததோர் சாரணராய்
மேவிட் டார்அச் சனாதிப திசின்னம்
விளங்கிட முதல் முதல் நம்பள்ளி
எழுபத்தைந்தில் எங்கள் பள்ளி
இனிக் கத் துடுப்பாட்டத் தலைமை
தழுவிக் கொண்டார் தக்க பலவாம்
சாதனை நாட்டி மேம் பட்டான்
செழுமைச் சாரணியத்தில் அடைந்த
தேர்ச்சி அதனால் பயிற்றுநராய்
முழுமை பெற்றான்! படையே வளர
முன்னின் றென்றும் உழைத்திட்டான்
இரண்டாம் அகில இலங்கை ஜம்போ
றியிலே தலைமை தாங்கிட்டான்
விரும்பிப் பள்ளி மேல் வகுப்பு போர்க்கு
வித்தை இலவச மாய் தந்தான்
கரும் பாய் இனிக்கும் இன் சொல் வாயில்
கண்ணில் பொலி வாய்க்கண்ணாடி
அரும்பி வளர்ந்த அழகிய தாடி
அனைவரின் அன்பின் மழை தோய்த்தான்
எங்கள் பள்ளி சிரேஷ்ட்ட மாணவர்
எழி லார் தலைவனுமாயிருந்தான்
பொங்கு கருணைப் புனிதச் சாரணர்
போற்றுத் தொண்டனு மாயிருந்தான்
இங்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
எய்திடும் மாணவனாய் பயின்றான்
தங்கம்போல் ஹரிச் சந்திரா சேவை
தலைவணங்கி நிதம் ஏத்திடுவோம்

# வை. ரமணானந்த சர்மா

ஆயிரத்து தொளாயிரத்து எண் பத்து நான்கிலே
தூயவெள்ளை மாமேனித் தோற்றத்து இற்றை வான்
மாவை நகர் தந்த மாணவமணியானோன்
தேவன் ரம ணானந்த சர்மா திகழ் எங்கள்
சாரணர் படையினிலே தனையிசைத்துக் கொண்டுயர்ந்த
நாரணனாய்ப் பணிகாத்தான் நால்வேத ஒழுக்கந்தன்
எண்பத்தா றாமாண்டில் எய்திப் பச்சைநாடா
பண்பட்ட சாரணர் க்காம் பரிசிதனைப் பெற்றிட்டான்
தாங்கிச்சா ரணர்படையின் துடுப்பாட்டத்தலைமை யினை
ஓங்கு புகழ் பெற்றான்! உயர்சனாதி பதி விருது
துணைத்துருப்புத் தலைமை சுடர்வெய்த வாங்கிட்டான்
மணிமாறன் எனப் பின்னாள் மண்ஏத்தப் பற்றிட்டான்
இவன் தலை மை ஏற்று துடுப்பாட்ட அணி எய்தியது
புவி வியக்கம் பலப் பலவாம் போட்டிகளில் வெற்றிகளை
பலகலையும் வல்லவனாய்ப் பணிக்கேற்ற பயமின்மை
நிலைகுலையைச் செயற்பாட்டின் நிலைக்கள மாம் பிரகாசம்
போர்க்காலச் சேவைக்கு புனித முதன்மை தந்து
சேர்த்துறுப்பி னர்த்திரட்டிச் சென்றுயர்ந்த பணிசெய்தான்
மலை போன்ற தோற்றத்துன் மலையாத சேவை மனம்
விலையில்லா அவன் மேன்மை விண்ணுலகும் போற்றுமின்று

மரணம் உன்னிடம் மண்டியிட்டு போனது
வரலாறு உன்னைத் தன தாக்கிக் கொண்டது.

கவிஞர். ச. வே.
பஞ்சாட்சரம்
யாழ். இந்து கல்லூரி

# குழுச் சாரணத் தலைவரின் 75 வருடகால செய்தித் தொகுப்பு

எழுபத்தைந்து வயதினைக் கொண்ட எமது சாரணர் குழுவின் வரலாறு குழந்தையாக, பிள்ளையாக இளைஞராக, குடும்பஸ்தகனாக பேரனாக, பூட்டனாக, பாட்டானாக, பல்வேறு பருவத்தினைக் கொண்ட போது, ஒவ்வொரு பருவத்திலும் சமூகநட்சத்திரமாக திகழ்ந்த வகையில்; பாட்டன் ஒருவன் மகிழ்ச்சியாக தனது இளைய தலைமுறையினரோடு கூடிக் குலாவுவதுபோன்ற ஓர் முழுமையான வாழ்வில் முடிவு பெறாத ஆண்டுவிழாவாக இப் பவளவிழா கொண்டாடப்படுகிறது.

என்ன நெருக்கடி ஏற்பட்டபோதும் தைரியத்துடன் தயாராய் இரு, மகிழ்ச்சியாய் வாழ் எம்மை மதிப்பீடு செய் என்ற நிலையிலே உங்கள் முன் சாரணர் குழு சார்பாக நிக்கின்றேன் எனக் கூறிக்கொண்டு எமது குழுவின்வரலாற்றிக்கு வருவோம். சுதந்திரத்திற்கு முன் .......... என்ற நிலையில்.

***1936 — 1944*** வரை இரண்டாவது உலகமகாயுத்தம் நடைபெற்ற காலப் பகுதியில் எமது குழுவினர் விமானங்கள் குண்டு வீசியபோது மக்கள் எவ்வாறு தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். என தாமும் பயின்று பயிற்சியும் அளித்தார்கள். அவ்வாறாக அக்கால சமுதாயத்திற்கு உதவிய அன்பர் திரு க. கனகராசா அவர்கள் இப்போது இங்கே எம்மிடையே இருக்கின்றார். மனிதன் அன்றாட வாழ்க்கை எவ்வாறாக அமைய வேண்டுமென சமூகத்தினர் வழிகாட்டலை எதிர்பார்த்த காலம். சகலரும் சுயதேவை பூர்த்தியில் ஈடுபட்ட நிலை மாறி அலுவலக சேவையில் ஈடுபடத் தொடங்கிய சமுதாய மாற்றக் காலமது. சாரணிய அனுபவக் கல்வி வளமாகவாழ அக்கால மாணவரை சாரணியக் குழு ஈந்தது. இந்த வகையில் சாரணியம் சமூக தேவையைப் பூர்த்தி செய்தது.

சுதந்திரத்திற்குப் பின்னர் ஒரு சகாப்த காலமாக நீரினுள் வாழ்வது போன்று நீச்சலடித்துக்கொண்டிருந்தது எமது குழு. 1960தைத் தொடர்ந்து உலக சாரணிய சங்கத்தின் சமுதாய தேவையை பூர்த்தி செய்யக்கூடிய வளர்ச்சிக் கொள்கைகள் எமது குழுவினரையும் அபிவிருத்தி அடையச் செய்தது. உலக ஜம்பொறிகளில் பங்குகொள்ளும் அளவிற்கு சாரணிய சினைப் பயிற்சிகளில் முதிர்ச்சி பெற்றிருந்தனர். இவ்வளவிற்கு தொண்டாற்றிய திருவாளர்கள் S. முத்துக்குமாரன் N. சிவசுப்பிரமணியம் ஆகியோரது இணைந்த சேவை திடீர் கூர்ப்பாகும், திரு. T. சிவராசா திரு. V. S. சுப்பிரமணியம் திரு. V. சுந்தரராசா ஆகியோரது பணிகளுக்கும் நன்றி.

1965 ஆம் ஆண்டினைத் தொடர்ந்து அகில இலங்கை ரீதியான போட்டிகளில் பங்குகொள்வது தவிர்க்கப்பட்டு ஆளுமை, மனிதநேயம் நிறைந்தவர்களாக உருவாகத் தொடங்கினர் போட்டி நடவடிக்கைகளில் பங்குகொள்வது மகாண மட்டத்துடன் நின்றுகொண்டது. இவ்வாறான ஓர் நடத்தை மாற்றம் சமுதாய தேவையை சாதாரண சாரணனாக இருக்கின்ற போது செய்கின்ற தொண்டை விட மனிதனாக வாழு'போது பல்வேறு கோணங்களில் மக்களுக்கு உதவ உதவிபெற வழிவகுத்தது.

1970ஆம் ஆண்டினைத் தொடர்ந்து சாரணர் குழுவுடன் அதிபர்களான திரு. E. சபாலிங்கம் அவர்களும் திரு. P. S. குமாரசுவாமி அவர்களும் இழையோடியிருந்தமை குழுவிற்கு அதிக உற்சாகத்தை அளித்தது 1978ஆம் ஆண்டினைத் தொடர்ந்த காலப் பகுதி யாழ் மாவட்ட சாரணர் குழுக்கள் தம்மை ஸ்திரப்படுத்திக் கொண்ட ஒரு காலப்பகுதியாகும். எமது கு. சா. த. திரு. மா. புவனேந்திரன் அவர்களது தீவிரப் போக்கினால் ஈடுகொடுக்கக்கூடியதாக இருந்தது. தொடர்ந்தும் குழுவின் தரத்தினை பேணிக் காத்து வரவேண்டியவனாகவிருந்தேன். மாவட்ட பயிற்சியைப் பொறுத்தவரை திரு. N. நல்லையா கலங்கரை விளக்காகவிருதார்.

## மாவட்டப் போட்டிகள்:-

[ 1971- 1982 ]றோட்டரிக்கேடயம் எமது குழுவிற்கே கிடைத்தது. 1986-ல் இறுதியாகவும் நாமே அதைப் பெற்றுக்கொண்டோம்.

## நாட்டுச் சூழ்நிலை:-

நாட்டுச் சூழ்நிலை 1983-ம் ஆண்டிலிருந்து சாரணியத்தை ஸ்தம்பிதம் அடையச் செய்த போதும் போர்கால சூழ்நிலை சாரணர் ஒவ்வொருவரையும் மேலதிக ஏமேஸன்ஸி சேவையைச் சுமர்த்தி நிற்க உணர்வு பூர்வமாக ஏற்றுக் கொண்டனர். எமது குழுவின் முதிர்ச்சி, நாட்டுத் தேவையை பூர்த்தி செய்து வைக்கவேண்டும் எனத் தூண்டியது 75வது ஆண்டிலேயே [1991] நாடு வாய் விட்டுக் கேட்காமலேயே, போர்க்காலத்தில் போக்குவரத்து ஒழுங்கு, நோயாளர் பராமரிப்பு, ஆஸ்பத்திரி சிரமதானம், போர்க்காலத்தில் சிரமதானம், பதுங்கு குழி அமைப்பு போன்ற பல்வேறு தியாக சேவைகளில் தேசத்திற்கும் இன்னல்களுக்கு மத்தியில் சேவை செய்தனர். குடாநாட்டுச் சாரணர் வரிசையில் [முதற் பத்து இடங்களில், 1, 3, 5, 6, 8, 10 இடங்களைப் பெற்றனர்.

தம்மைத் தேசத்திற்காக அர்ப்பணித்துக்கொண்ட சாரணர்கள் ஹரிச்சந்திரா, ரமணாந்தசர்மா குருளையரான குகன் கண்டாவளைத் திலீபன் போன்றோர் தியாகம் தொடர்கிறது, இந்த வகையில் தேவை வேறுபட்ட நிலையில் 1984 ஆம் ஆண்டிலிருந்து தேசிய சாரணர் வாரப் போட்டிக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு உ. மா. ஆணையாளர் நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் போ வ சீரின்மையால் சாரணிய தலைமைக் காரியாலயத்

திற்கு உரிய நேரத்திற்குச் சென்றடையவில்லை. இதன் பின்பு மேற்கூறிய இரு காரணங்களாலும் அகில இலங்கைப் போட்டியைத் தவிர்தலுடன் இதே போன்று அ இலங்கை 4 வது ஜம்பொறியில் பங்கு கொள்வதா விடுவதா என்ற நிலை இருந்தும் எண்மர் சென்று திரும்பினர், இடம்பெயர்தவர்களுக்கு உடை, மாணவர்களுக்கு புத்தகம் சேகரித்து விநியோகித்தோம். அண்மையில் அதிபர் அ. பஞ்சலிங்கம் அவர்களின் ஆலோசனைப்படி உணவுப் பொதிகளை வேண்டியபோது சேகரித்துக் கொடுத்து வருகின்றோம்.

### வெளிநாடுகளில் :-

உயர் கல்விக்காகவும், வேலைவாய்ப்பிற்காகவும் இங்கு வாழ முடியாத கெடுபிடி நிலைகளிலும் ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளுக்குச் சென்ற சாரணர்கள் மருதன் ஓட்டப் போட்டிகளில் பாரிய பணத் தொகையைப் பெற்று இலங்கை அகதிகளுக்கும், சாரணிய கல்லூரி நாடக மேடைகளில் ஏறியவர்கள் அங்கு இவ்விட நாடக கலாச்சாரத்தை வளர்ப்பவர்களாகவும் அப் பணத்தை பொதுச் செலவினங்களுக்குக் கொடுப்பவர்களாகவும் இருப்பது சாரணிய மனப்பாங்கோ M. Sc பட்டம் பெற்ற சாரணன் ஒருவன் அதே தகுதி உடைய அமெரிக்கன், லண்டன் பிரஜைகளுடன் போட்டியிட்டு சாரணியன் என்றமையால் முன்னுரிமை கொடுக்கப்பட்டு எஞ்சினியராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

### சமூகசேவை

சாதாரண சேவையைவிட 1982 இல் கேரதீவு சங்குப்பிட்டி மகாதேவா பாலம் மூடுவதற்காக குடாநாடு பூராக சேவை செய்தபோது சாரணர் வரிசையில் கூடிய மனிதபலம் கூடிய நேரம் சேவை செய்தார்கள் எனப் புகழப்பட்டோம்,

### படைப்பிரிவுகள்

எமது குழு குருளையர், சாரணர், கடற்சாரணர் திரிசாரணர் என நான்கு பிரிவாக முறையே திருவாளர்கள் முத்துக்குமாரன் விக்னேஸ்வரன் தங்கவேல் வில்வராசா ஆகிய ஆசிரியர்களது கண்காணிப்பில் வளம்படுத்தப்படுகிறது. இவர்கள் அவஸ்தை II பயிற்சி தகமை பெற்றவர்களாவர்.

### வங்கிக் க / கு

குழுவிற்கான வரவுகள் அனைத்தும் வைப்பிலிட இலங்கை வங்கி இரண்டாவது கிளையில் சேமிப்புக் கணக்கில் 24040 இலக்கத்தில் உள்ளது: வேதன வேலை வாரப் போட்டியில் 1991 / 92 ல் எமது குழுவே முதலிடத்தைப் பெற்றது.

**பயிற்சிகள்**

வெட்டவெளிப் பயிற்சிக்குப் பொருத்தமற்ற காலமாகையில் எமவருது டாந்த தவணைகளுக்குரிய பயிற்சிகள், கல்லூரி வளவினுள்ளும், கிராமங்களிலும் இரண்டாம் முதலாம் வகுப்பு சின்னப் பயிற்சிகள் கல்லூரியினுள்ளும் சாரணர் கள் ஆதரவாளர் இல்லங்களிலும் நடைபெறுகிறது. தேர்ச்சி சின்னப் பயிற்சிகள் 1993 ல் இருந்து இரு வாரத்திற்கு ஒருநாள் மட்டும் என வரையறை செய்துள் ளோம் விழாக்களுக்கு, போட்டிகளுக்கு ஐம்பொறிகளுக்கு விஷேட பயிச்சி கடற் சாரணர்களது பூம்புகார் பயிற்சிப் பாசறை திரு. அ. அரவிந்தநாதன் பொறுப் பில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

எமது பயிற்சிக்கு உதவிய மு. மா. ஆணையாளர் திரு. காந்தமூர்த்தி பி. மா. ஆ. டோறஸ் இராசசிவம் பழைய மாணவர்களான உ. மா. ஆணையா ளர்களான குணரத்தினம், இராஜ்குமார், தேவரஞ்சன் ஆகியோரும் பைலட் பாலா சின்னப் பரீட்சகர்களாக இருந்த சாரணர் குழுவிற்கும் பாசறை வாசத் தின்போது உணவு வழங்கியவர்களுக்கும் முழுப் பயிற்சிக்களத்திலும் காணப்படும் திரு. N. நல்லையா அவர்களும் அதிபர்களான திரு. S. பொன்னம்பலம் திரு. K S. குகதாசன் திரு. A. பஞ்சலிங்கம் அவர்களுக்கும் நன்றியைக் கூறுகின் றேன்.

**75 ஆண்டுகளில்**

*1964 - 71 - 33 ராணிச் சாரணர்கள்*
*1972 - 92 - 48 ஜனாதிபதிச் சாரணர்கள்*

1964 க்குப் பின்னர் வருடாவருடம் 2 உயர் தகுதிச் சாரணர் உருவாகி யுள்ளனர். இத் தொகையினை அதிகரிக்க முயல்வோம். இச் செய்தித் தொகை யினை வகுக்க பதிவுகளைத் திருவாளர்கள் N. சிவசுப்பிரமணியம் S. முத்துக்கு மாரன் M. புவனேந்திரன் முன்னாள் மாவட்ட ஆணையாளர் S. காந்தமூர்த்தி ஆலோசனை வழங்கிய முன்னாள் உப அதிபர் திரு. க. சிவராமலிங்கம் ஆகி யோருக்கு கல்லூரி சார்பாக நன்றி கூறுகின்றேன். பல விடயங்கள் இடம்பெற வில்லை காரணம் அச்சு வெளியீட்டுச் செலவு இமயம் போன்றது. பூமி போல் பொறுத்தருள்வீர்கள் மன்னிப்புக்கோரி பெற்றோர்க்கும் இங்கிருக்கும் சகலருக் கும் கூறி விடைபெறுகின்றேன்.

வணக்கம்

பொ. ஸ்ரீஸ்கந்தராசா
B. A. B. Phil (Hons) Eons,
Dl-in. Ed.


# PAST SCOUTS

| Name | Year | Position | Designation Address |
|---|---|---|---|
| Asok U.K. | 1982 — 84 | | U. N. A. H. C. R. Branch, Jaffna. |
| Amaranath . S | 1966 — 71 | Queen | U. K. |
| Balakrishnan . P | 1966 — 72 | | Co-ordsnator |
| Cnaagarajeh . T | 1931 — 36 | T. L. | |
| Canagalingam . E | 1938 — 40 | | 98, Arasady Rd, Jaffna. |
| Gananasampanthan S. | 1973 — 80 | P S., A. P L | Sea Scout Sailors. |
| Indrashree . P | 1973 — 81 | A. P. L., P. S. | Switzerland. |
| Jamunanantha . S | 1982 — 85 | | Medical Faculty, Jaffna. |
| Jeyavarathan T. | 1983 — 90 | | Electronic Engineer |
| Kalaravi . K | 19 1 — 79 | T. L., P. S. | Msc, E. Engineer, U. K. |
| Kirubanantha . S | 1982 — 85 | | Agricultnre Faculty, Jaffna. |
| Linkanathan , K | 1983 — 86 | | |
| Paramalingam . S | 1940 — 47 | A. P. L. | Registerd M. P., 334, K K.S.Rd, Jaffna. |
| Puvirajasingam | 1964 — 71 | A. P, C.P S | Canada. |
| Murugavel . P | | P. S. | Udayan. Publishers, Ltd. |
| Manoharan . T . V | 1961 — 66 | | Scout C. Secraetary |
| Mahindan . S | 1978 — 79 | Cup | Bsc Student, J. Campus |
| Murukaverl . P | 1981 — 83 | | Swetzerland. |
| Rajkumar . R | 1979 — 83 | Instructoai | 14, Rasa Veethi Nallur. |
| Ramanathan . A | 1944 — 49 | | S. S Officer, Jaffna District. |
| Saravanabhavan . E | 1966 — 74 | Q S. | Shubra Udayan, Managing Director, Jaffna. |
| Sivarajah . S | 1946 — 47 | P L. | Vice Principal J. H. College. |
| Somasundaram . S . C | 1950 — 58 | | Devotee, Sivan teample Jaffna. |
| Senathipathy . S | 1986 — 88 | P. L. | Management Student U K. |
| Satkuneswaran S | | T. L. | Canada. |
| Sivaramalingam . K | 1942 — 44 | P. S. | Orator. |
| Thavagopal . R | 1962 — 68 | | |
| Thillainathan . P | 1965 — 71 | Q S. | Hatten N. Bank Mannar. |
| Yoganatha K . T | 1965 — 71 | Q S. | |

Q. S: Queen's Scout, P. S: President Scout, T. L. Troop Leader, P. L: Potol Leader, Assistant.
The rest are normal scout mmbers.

**For All your Optical Requirements**

**Just Step in to**



# S·M·FERNANDO

SPECIALAISTS INHAND LINES

THE LATEST TECMNO LOGY

INOPTICAL WORK

EYES SRIL FULLY TESTED

AND THE RIGHT LENS

FOR THE RIGHT VISION CHOSEN

## S. M. FERNANDO

**580, HOSPITAL ROAD, JAFFNA.**

(Near Bank of Ceylon)

அன்பளிப்பு




# யோகாஸ் பிடவை அகம்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

**16 B, பெரியகடை யாழ்ப்பாணம்.**

கிளை :-

## குமாரி ரெக்ஸ்ரைல்

முத்திரைச் சந்தி,
யாழ்ப்பாணம்.


இராசன் அச்சகம், 144, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.